# தூதன்

தூதன் 35 ஜூலை - ஆகஸ்ட் 2026 தூது 6

ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக
ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும்,
திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான். ஏசாயா 28:16




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை - தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஆயரம்மா மடல் | 04 |
| ஃபுஜைரா போதகர் மடல் | 06 |
| ஆயரம்மா மடல் - ஃபுஜைரா | 12 |
| இராஸ் அல் கைமா - போதகர் மடல் | 19 |
| ஆயரம்மா மடல் - இராஸ் அல் கைமா | 22 |
| செயலர் மடல் | 25 |
| நீங்கள் கிறிஸ்தவரா! | 28 |
| திருச்சபை ஜெபநாள் | 29 |
| வேதவினா போட்டி | 32 |
| தெரிந்துகொள்வோம் | 35 |
| Health Tips | 37 |
| தமிழ் வேதவகுப்பு - சிறுவர் பகுதி | 38 |
| Children’s Corner | 39 |
| Birthday Celebrants - July | 45 |
| Wedding Anniversary - July | 49 |
| Abishai | 51 |
| Birthday Celebrants - August | 54 |
| Wedding Anniversary - August | 57 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபை மக்கள் யாவருக்கும் எனது அன்பான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஃபுஜைரா, மற்றும் இராஸ் அல் கைமா சபைகளில் நடைபெரும் ஊழியங்களுக்காகவும் ஆண்டவரைத் துதிக்கிறேன். கடந்த ஜுன் மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து பாதுகாத்து வழி நடத்தினார். கடந்த மாத ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். நமது திருச்சபையின் 47-வது வருடாந்திர பொதுக்குழு சிறப்பாக நடைபெறவும், புதிய நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்படவும் ஆண்டவர் உதவி செய்தார். புதிதாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ள Vice President Mr. David Rajan, செயலர் Mr. P. Prakash பொருளாளர் Mr. A. Johnson மற்றும் அனைத்து EC அங்கத்தினர்களையும் அன்புடன் வாழ்த்துகிறேன். ஊழியத்திற்கென்று அர்ப்பணித்துள்ள தமது பிள்ளைகளை ஆண்டவர்தாமே திருச்சபைக்கு ஆசீர்வாதமாக பயன்படுத்துவாராக. கடந்த வருடங்களில் ஊழியங்களை நிறைவாக செய்திருக்கும் Vice President Mr. Ben Selva, செயலர் Mr. Moses Vijayakumar மற்றும் EC அங்கத்தினர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

இவ்வருடத்தின் ஏழாவது மாதத்தைக் காண ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தொடர்ந்து சபையையும், சபையின் ஊழியங்களையும் ஆண்டவர் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக. குறிப்பாக இம்மாதத்தில் நடைபெரும் Summer Camp Ministry ஆசீர்வாதமாக அமைய ஜெபம் செய்வோம். நம்முடைய வருடாந்திர ஸ்தோத்திர பண்டிகைக்கான ஆயுதங்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக. இம்மாதம் விடுமுறைக்காக சொந்த ஊர்களுக்கு செல்லும் குடும்பங்களுக்காகவும், பிரயாணங்களுக்காகவும் ஜெபிப்போம். ஆண்டவர் இப்புதிய மாதம் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய கிருபை செய்வாராக. இம்மாதத்திற்கான வாக்குத்தத்த வசனத்தை தியானிப்போம்.

**“சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.”** ஏசாயா 40:29

**'He gives power to the faint and strengthens the powerless.' Isaiah 40:29**

பாலைவன கிராமம் ஒன்றில் பஞ்சம் ஏற்பட்டது. கிராம தலைவர் கிராமத்தை காலி செய்துவிட்டு பட்டணத்திற்கு சென்றுவிடலாம் என்று முடிவு செய்தார். எல்லாரும் தங்கள் பொருட்களை பிரயாணத்திற்கென்று ஆயத்தப்படுத்தினர். எல்லாருடைய பொருட்களும் மொத்தமாக வைக்கப்பட்டது. தங்களால் இயன்ற பொருட்களைத் தூக்கி வருமாறு தலைவர் எல்லாருக்கும் சொன்னார். நீண்ட தூர பயணம்.எனவே எல்லாரும் முந்திச் சென்று எடை குறைவான பொருட்களைத் தூக்கிக் கொண்டனர். சிலர் துணிகளை தூக்கினர். சிலர் பாத்திரங்களை தூக்கினர். சிலர் குழந்தைகளைத் தூக்கினர். ஆனால் உணவுப் பொருட்கள் இருந்த மூடை மிகவும் பெரியதாக இருந்ததால் யாரும் அதை தூக்கவில்லை. கடைசியில் இளைஞர் ஒருவர் தானாகவே முன்வந்து உணவு மூடையைத் தூக்கிக்கொண்டார்.

எடை அதிகமாகவே இருந்தது. எல்லாரும் அவரை தவறாக முடிவெடுத்துவிட்டார் என கேலி செய்தார்கள். ஆனால், பிரயாணத்தில் நாட்கள் செல்லச்செல்ல எல்லாரும் உணவை சாப்பிட சாப்பிட உணவு குறைந்து கடைசியில் அவருக்கு சுமை குறைந்து போனது. பிரயாணம் முடியும் போது எல்லாரும் நிறைய சுமைகளை சுமந்து கொண்டிருந்த போது அவர் சுமைகள் ஏதுமில்லாமல் மற்றவர்களுக்கு உதவி செய்ய ஆரம்பித்துவிட்டார்.

ஆம். அன்பானவர்களே, நம் வாழ்விலும் கூட ஆரம்பகாலத்தில் நாம் சில போராட்டங்களையும், சோதனைகளையும் சந்திக்கலாம். போராட்டங்கள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. ஆனால், அந்நேரங்களில் நாம் சோர்ந்து போகாமல் நிலைத்திருந்து முயற்சி செய்யும் போது நாம் வாழ்வில் ஜெயிக்க முடியும். நமது ஆண்டவரும் நாம் சோர்ந்து போகாதிருக்க நமக்கு பெலன் தந்து நம்மை ஆசீர்வதிக்கும் தேவனாயிருக்கிறார். நம்முடைய தியான வசனமும் சொல்கிறது - "சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்." ஆண்டவர் எவ்வாறு நமக்கு பெலன் தருகிறார் என்பதை தியானிப்போம்.

முதலாவது...

**1. சுமைகளை அறிந்திருக்கும் ஆண்டவர். GOD KNOWS YOUR BURDEN.**

ஏசாயா 40:28 "பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை".

சில நேரங்களில் நமது கஷ்டங்களும், பாடுகளும் ஆண்டவருக்கு தெரிவதில்லை என்று நாம் வருந்துகிறோம் அல்லது சோர்ந்து போகிறோம். ஆனால், நம்மை உருவாக்கிய தேவன் நமது பாடுகளை நிச்சயமாவே அறிந்திருக்கிறார். இஸ்ரவேலர் சிறையிருப்பிலிருந்த நாட்களில் கூட அவ்விதமாகவே வருத்தப்பட்டனர். ஆனால் ஆண்டவர் "யாக்கோபே, இஸ்ரவேலே என் வழி கர்த்தருக்கு மறைவாயிற்று என்றும், என் நியாயம் என் தேவனிடத்தில் எட்டாமல் போகிறது என்றும் நீ சொல்வானேன்?" (ஏசாயா 40:27) என்று கேட்கிறார். இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்று சொல்லும் ஆண்டவர் நான் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமிலலை என்று நம்பிக்கையூட்டுகிறார். மோசே இஸ்ரவேல் ஜனங்களை வனாந்திரத்தில் வழிநடத்திச்செல்லும்போது பல சோதனைகளை சந்திக்கிறார். ஜனங்கள் கன்றுக்குட்டியை செய்து வணங்க ஆரம்பித்த போது தேவ கோபம் மூளுகிறது. ஜனங்களுக்காக மன்றாடுகிறார். தேவன் இரங்குகிறார். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி நீ சொன்ன இந்த வார்த்தையின் படியே செய்வேன். என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது. உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்று சொல்கிறார். நம்மையும் நம்முடைய பாடுகளையும் முழுவதுமாக அறிந்திருப்பவர் ஆண்டவர் தவிர வேறு யாருமில்லை.

இரண்டாவது...

**2. சுமைகளில் பெலன் தருபவர். GOD GIVES STRENGTH IN OUR BURDEN.**

ஏசாயா 40:29 "சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்".

சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுப்பேன் என்று வாக்கு கொடுக்கிறார். நாம் கவனிக்கவேண்டியது - ஆண்டவர் நமக்கு சுமைகள் இல்லாத வாழ்வை வாக்குப்பண்ணாமல் சுமைகளை தாங்குவதற்கான பெலனைத் தருவேன் என்று வாக்குப் பண்ணுகிறார்.

2 கொரிந்தியர் 12-ம் அதிகாரத்தில் 9-ம் வசனத்தில் பவுல் அப்போஸ்தலர் சொல்கிறபடி - என் மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படி நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர் என் கிருபை உனக்குப்போதும்: பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார் - என்று குறிப்பிடுகிறார். நமது தந்தையாகிய ஆண்டவரும் நம் பலவீனங்களை அறிந்திருக்கிறவர். நமது சூழ்நிலைகள் எல்லாம் அவருக்குத் தெரியும். அவரும் நம்மைப்போலவே பாடுகளைப்பட்டவர். எனவே நமக்கு வேண்டியவைகளை நமக்கு வேண்டிய நேரத்தில் தந்து நம்மை பெலப்படுத்துவார்.

மூன்றாவது...

### 3. சுமைகளை இலகுவாக்குபவர். GOD LIGHTENS OUR BURDEN.

யாத்திராகமம்17:12 மோசேயின் கைகள் அசந்துபோயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள அதின்மேல் உட்கார்ந்தான ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்.

வருத்தப்பட்டு பாரஞ்சுமப்பவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று வாக்குப் பண்ணும் ஆண்டவர் நமது பாவங்களையும் பாரங்களையும் சிலுவையிலே சுமந்து தீர்த்தவர். அவரே நமது சுமைகளை இலகுவாக்குபவர். சுமைகளை நமக்கு இலகுவாக்கி உதவும்படியாகத்தான் ஆண்டவர் தமது சரீரமாகிய சபையை பயன்படுத்துகிறார். நீங்கள் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் என்ற பவுல் அப்போஸ்தலரின் கூற்றுப்படி நாம் பிறர் சுமைகளை சுமக்க அழைக்கப்படுகிறோம். யாத்திராகமம் 17-ம் அதிகாரத்தில் அமலேக்கியரோடு கூடிய யுத்தத்தில் மோசேயின் கரங்கள் தளர்ந்தபோது ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து அவன் கைகளைத் தாங்கினார்கள். அது போன்று நாமும் பிறரை தாங்க முன்வரவேண்டும். நாம் தளரும் போதும் ஆண்டவர் நம்மை தாங்க தமது தூதர்களை நிச்சயமாக அனுப்புவார்.

ஆம். அன்பானவர்களே, நமது வாழ்க்கை போராட்டங்களால் நிறைந்தது. எல்லா வயதிலேயும் இப்போரட்டங்கள் தொடர்கிறது. ஆனால், நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் நம்மைப் படைத்த ஆண்டவர் நம்மையும் நமது பாடுகளையும் அறிந்திருக்கிறார். நமது பாடுகளை சகிக்கவும் ஜெயிக்கவும் பெலன் தருகிறார். நிச்சயமாகவே நமது பாடுகளை இலகுவாக்குவார். நாமும் ஆண்டவரை உறுதியாக பற்றிக்கொள்வோம். நம்மைப்போல பாரம் சுமப்பவர்களையும் நினைத்துக்கொள்வோம். அவர்களையும் தாங்க முன் வருவோம். ஆண்டவர்தாமே நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. K.சுதாகர்.
சபை போதகர்/தலைவர்.

# ஆயரம்மா மடல்

## இயேசுவிடம் நன்மை பெற்ற இல்லத்தரசிகள் - நகோமி

வாழ்வில் பிரச்சினையை அல்லது தோல்வியைச் சந்திக்கும்போது, இத்துடன் வாழ்வு முடிந்து விட்டது என்று சோர்ந்து துவண்டு விடுகிறோம். அதற்கு நமது தவறுகளே சில வேளைகளில் காரணமாகி விடுவதால் குற்ற உணர்வுகளுக்கு ஆளாகி விடுகிறோம். உண்மையாய் தவறுகளை தேவ சமூகத்தில் ஒப்புக்கொண்டு முன்னேறினால் நாம் ஆசீர்வாதம் பெறுவதோடு, ஆசீர்வாதத்தின் வாய்க்காலாயும் மாறுவோம். இருளைச் சமாளித்த நகோமியின் சரித்திரத்தை இந்தப் பகுதியில் பார்க்கலாம்.

### நகோமி - (இன்பம் - Pleasant)

எலிமலேக்கு என்பவனின் மனைவிதான் நகோமி. இந்தத் தம்பதியினருக்கு இரு மகன்கள் - மக்லோன், கிலியோன். தேசத்திலே பஞ்சத்தின் காரணமாக பெத்லகேமை விட்டு மோவாபுக்குப் போய் சஞ்சரித்தார்கள். அங்கே நகோமி தன் கணவனையும், தன் செல்ல மகன்களையும் சாகக் கொடுத்தாள். வெறுமையுடனும், கசப்புடனும் வாழ்வில் விரக்தியுடனும் நகோமி தன் மோவாபிய மருமகளான ரூத்துடன் பெத்லகேம் திரும்பினாள். வாழ்க்கையில் இத்தனை இழப்புகளைச் சந்தித்திருந்த நகோமி திரும்பவும் எப்படி தலை நிமிர்ந்து நிற்க முடிந்தது? சவாலான சரித்திரம் தான். நமது தோல்விகளை ஜெயமாய் மாற்றும் தேவனை நாம் சார்ந்து கொண்டால் நம்முடைய வாழ்வும் ஜெயமாய் முன்னேறும் என்பதில் சந்தேகமில்லை.

**1. கடமையைச் செய்தாள்:**

நகோமி தன் மருமக்களைத் திரும்பிப் போகக் கூறினாலும் அவளது மனநிலையைப் பாருங்கள். தான் ஒரு தனி மரம், ஆதரவற்றவள், வயதானவள், இருப்பினும் தன் மருமக்களாவது நன்றாக இருக்கட்டும் என்றுதான் நினைத்தாள். நீங்கள் போய் வாழ்ந்திருங்கள் என்று ஆசீர்வதித்து அனுப்பினாள். ஓர்பாள் போய் விட்டாள். ரூத்தும் பெத்லகேமுக்கு வந்தபிறகு ஒரு நாள் நகோமி அவளிடம் கூறுகிறாள். என் மகளே, நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி நான் உனக்கு சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ! ஓர்பாளிடம் கொடுத்த ஆலோசனையை போன்ற ஆலோசனை அல்ல அது. அன்று மோவாபிலிருந்து பெத்லகேமுக்கும் வரும் வழியில் நகோமியின் எண்ணங்களிலும் வார்த்தைகளிலும் தெளிவில்லை. இப்போது அவள் பெத்லகேமில் தேவன் அவளுக்கு வாழக்கொடுத்த இடத்தில் தேவ மக்களுடன் சஞ்சரித்ததால் எண்ணத்தில் தெளிவு இருந்தது. அவள் ரூத்தை சரியாய் வழிநடத்தினாள். ரூத்திற்கு ஏற்ற மணமகனாக போவாசைத் தெரிந்தெடுத்தாள். திருமணம் செய்து வைத்தாள். ரூத்திற்கு திருமணமானால் மறுபடியும் தனிமரமாகி விடுவேனோ என்ற தயக்கம் சிறிதளவும் இல்லை. தனக்கு கிட்டாத வாழ்வு இந்த மோவாபிய இளம் பெண்ணிற்கு எதற்கு என்று ஒரு போதும் நினைக்கவில்லை. நகோமி ரூத்திற்கு செய்ய வேண்டிய கடமையைச் சரியாகச் செய்தாள்.

## 2. கசப்பு மாறியது:

ரூத் வாழ்ந்திருக்க வழி பார்த்த நகோமிக்குகூட வாழ்வில் சந்தோஷமே கிடைத்தது. தன் ஆழமான அன்பையும் கரிசனையையும் நகோமி இங்கு நிரூபிக்கிறாள். தன்னுடைய கசந்த வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைக்கும்வண்ணமாய் அவர்கள் உறவு தொடர்ந்து செழித்தோங்கியது. நகோமியின் தன்னலமற்ற சேவை மிகவும் மெச்சப்படத்தக்கது. கருணைக் கண்ணன் தான் வாழ்வில் கருணையை அனுபவிக்க முடியும். நம் நாட்டில் பல மாமியார் தங்கள் மருமக்களைக் கடினமாய் நடத்தக் காரணம் அவர்கள் அதைவிட கடினமான விதத்தில் அவர்கள் மாமியார்களால் நடத்தப்பட்டார்கள். இந்த தொடர்கதையை நொறுக்கி நான் வாழ்வில் கஷ்பங்களை அனுபவித்தேன். என் மருமகள் அவற்றை அனுபவிக்கக் கூடாது என்று கூறும் மாமியார் உள்ள வீடுகளில் சமாதானம் நதியைப் போல பெருக்கெடுத்து ஓடும் என்பதில் சந்தேகமில்லை. ரூத்தின வாழ்க்கை போவாசின் மூலம் சரியாக மாறியதால் நகோமியின் வாழ்க்கையில் இருந்த கசப்பு மாறியது.

## 3. கனம் பெற்றாள் :

போவாஸ் மற்றும் ரூத் தம்பதியினரின் ஆண் குழந்தையையும் நகோமி வளர்க்கும் தாயானாள். அந்த குழந்தைக்கு ஓபேத் என்று பெயரிய்பட்டது. (ஓபேத் - ஆராதிப்பவர்) என்று பொருள். பிள்ளைப் பிறந்த சூழ்நிலையிலும் அவள் எருசலேம் குமாரத்திகளின் வாழ்த்தைப் பெறுகிறாள். அவள் நிமித்தம் அவர்கள் கர்த்தரை ஸ்தோத்தரித்தார்கள். நகோமி சுயபரிதாபங்களுக்கும் தன்னை இடம் கொடுக்கவில்லை. இல்லாதவைகளை எண்ணி வருந்தவில்லை. மாறாக ரூத்தின் பிள்ளையை தன் மடியிலே வைத்து வளர்த்தாள். அதன் பிறகு அவள் கவலையில்லாமல் சந்தோஷமாக வாழ்ந்தாள். நகோமி ஒரு சமயத்தில் தன் வாழ்வில் நடந்த கசப்பான நிகழ்வுகளை எண்ணி (மாராள் - கசப்பு என்பது பொருள்) மாராள் என்று தன்னைக் கூப்பிடச் சொன்னாள். தன் பழைய வாழ்வை விட்டு புதிய வாழ்வில் மதுரமான நல்ல வாழ்வைப் பெற்றாள். ரூத்தின் மகனாகிய ஓபேத்தின் வம்சாவழியாகிய தாவீதின் மூலமாக இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இந்த குடும்பம் இடம்பெறும் பாக்கியத்தைப் பெற்றது.

நகோமியின் வாழ்க்கையில் நன்மை செய்த ஆண்டவர் நம் வாழ்வில் நன்மைகளை அருளுவது நிச்சயம். நகோமி வாழ்வில் கசப்புகள் நீக்கவும், கனம் தரவும் ஆண்டவர் நல்லவராகவே இருக்கிறார். நாமும் ஆண்டவருக்கு பயந்து கடமைகளை நிறைவேற்ற அர்ப்பணிப்போம். கர்த்தர் நிச்சயமாக நன்மையாக நடத்துவார்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. ஸ்மைலி சுதாகர்
ஆயரம்மா, துபாய.

## கற்போம் கிரேக்கம் - 17

### கிரேக்க மொழியின் பதினாறாவது எழுத்து

Pi Π,π  கிரேக்க எழுத்துக்களின் பதினாறாவது எழுத்து, இது ஆங்கில எழுத்து P அல்லது p க்கு ஈடானது.

#### வார்த்தை

**Parakletos** - பராக்கிளீட்டோஸ் - பரிசுத்த ஆவியானவர் ,திரித்துவ கர்த்தரின் மூன்றாம் நபராவார். ஆயினும், பல தேவாலயங்களில், பரிசுத்த ஆவியானவர் தெளிவற்ற ஒரு "சக்தி" அல்லது "வல்லமை" என்று மட்டும் கருதப்படுகிறார். பிதாவும் குமாரனும் முன்னிலைப்படுத்தப்படும்போது, ஆவியானவர் பின்னுக்குத் தள்ளப்படுகிறார். இது ஒரு இறையியல் பிழை மட்டுமல்ல - இது, திரித்துவ நம்பிக்கையை "இரட்டுவம்" (Binity) என்னும் வேதவிரோத நிலைக்கு இறக்கிவிடும் ஆபத்தான கோட்பாடாகும்.

#### 1. பரிசுத்த ஆவியானவர் யார்?

#### பராக்கிளீட்டோஸ் என்னும் பெயரின் பொருள்

பராக்கிளீட்டோஸ் என்னும் கிரேக்க வார்த்தைக்கு "அருகில் அழைக்கப்படுகிறவர்" என்று பொருள். அதாவது, நம்முடன் நிற்கும் உதவியாளர், ஆதரவாளர், தேற்றரவாளர் என்பதே அதன் ஆழமான அர்த்தம். ஆங்கிலத்தில் "Comforter" (தேற்றரவாளன்), "Advocate" (வழக்காடுகிறவர்), "Helper" (உதவியாளர்) என்று மொழிபெயர்க்கப்படுகிறது. ஆனால் எல்லா மொழிபெயர்ப்புகளும் ஒரே உண்மையைச் சுட்டுகின்றன: இவர் ஒரு தொலைதூர சக்தி அல்ல் நம்மோடு நிலையாக நிற்கும் இலட்சிய ஆள்நிலை நபர்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து, "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அவர் உங்களுக்கு வேறொரு தேற்றரவாளனை அனுப்புவார்" என்று உரைத்தபோது (யோவான் 14:16), "வேறொரு" என்று குறிக்க "அல்லோஸ்" (allos) என்னும் கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார். அதன் பொருள்: அதே இயல்பில், அதே தன்மையில் உள்ள இன்னொருவர். ஆண்டவர் இயேசு சீஷர்களுக்கு எப்படியிருந்தாரோ, அதே ஆர்வமும் அன்பும் கொண்டு பரிசுத்த ஆவியானவரும் இருப்பார். மாற்று ஒன்றல்ல - தொடர்ச்சி.

#### திரித்துவத்தில் அவருடைய இடம்

நிசியா-கான்ஸ்தாந்திநோபிள் விசுவாசப் பிரமாணம் (கி.பி. 381) தெளிவாக அறிவிக்கிறது: "பரிசுத்த ஆவியானவரை, கர்த்தரும் ஜீவனைத் தருகிறவருமாகிய அவரை, பிதாவிலிருந்து புறப்படுகிறவரும், பிதாவோடும் குமாரனோடும் கூட வணங்கப்படுகிறவரும் மகிமைப்படுத்தப்படுகிறவருமாகிய அவரை விசுவாசிக்கிறேன்." பரிசுத்த ஆவியானவர் கர்த்தரின் ஒரு பொருள் அல்ல் வல்லமையின் ஒரு வெளிப்பாடு மட்டும் அல்ல. அவர் சம்பூரண தெய்வீக நபர் (Hypostasis).

அப்போஸ்தலர் நடபடிகள் 5:3-4-இல் பேதுரு அனனியாவை நோக்கி: “நீ பரிசுத்த ஆவியானவரிடம் பொய்சொல்ல... கர்த்தருக்கே பொய் சொன்னாய்” என்றார். ஆவியானவரிடம் பொய் பொய் சொல்வது கர்த்தருக்கே பொய் சொல்வது. ஆவியானவருக்கு விரோதமாகப் பாவம் செய்வது மன்னிக்கப்படாத பாவம் (மத்தேயு 12:32). இந்த வசனங்கள் ஆவியானவரின் தெய்வீகத்திற்கு எந்த சந்தேகமும் இடமில்லாதவாறு சாட்சி பகர்கின்றன.

### 2. பரிசுத்த ஆவியானவரும் இயேசுவும்: வித்தியாசமும் பிரதிநிதித்துவமும்

#### ஆழமான தொடர்பு - ஆனால் ஒரே நபர் அல்ல

யோவான் நற்செய்தியில் கேட்கப்படும் ஆழமான கேள்வி: பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவோடு எப்படிப்பட்ட உறவு கொண்டுள்ளார்? பதில் தெளிவானது, ஆனால் நுட்பமானது. பரிசுத்த ஆவியானவரும் ஆண்டவர் இயேசுவும் மிகவும் நெருக்கமாகத் தொடர்புடையவர்கள் - ஓர் அறிஞர் ஆவியானவரை “இன்னொரு இயேசு” என்று கூட விவரித்தார். ஆயினும் அவர்கள் ஒரே நபர் அல்ல. ஆண்டவர் இயேசு கிறிஸ்து உலகில் இருந்து பிரிந்து போகிறார் (யோவான் 14:19). சீஷர்களால் அவரது உடல் உருவிலான சாந்நித்தியத்தை தொடர்ந்து அனுபவிக்க இயலாது. ஆனால் ஆண்டவர் அவர்களை அனாதைகளாக விட்டுப்போவதில்லை. “வேறொரு” பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக வாக்களிக்கிறார் - ஒரு மாற்று அல்ல, ஒரு பிரதிநிதி.

#### முக்கிய இறையியல் உண்மை

பரிசுத்த ஆவியானவர் வருவது ஆண்டவர் இயேசுவே வருவதற்கு நிகரான விளைவைத் தரும் - ஆயினும் ஆவியானவர் இயேசு அல்ல. ஆவியானவர் கிறிஸ்துவை மறு-நினைவூட்டுகிறார், மறு-வெளிப்படுத்துகிறார் (சந-சநளநவௌ). இதுவே யோவான்னிய வல்லாவி இறையியலின் தனித்தன்மை.

#### கிறிஸ்துவின் பிரதிநிதியாக ஆவியானவர்

Johnston (1970) இந்த உறவை அழகாக விளக்குகிறார்: ஆவியானவர் “இன்னொரு இயேசு” என்பது, அவர் இயேசுவின் பிரதிநிதி என்ற அர்த்தத்தில் மட்டுமே சரியானது. அவர் கிறிஸ்துவை மாற்றுவதில்லை அவர் கிறிஸ்துவை உயிரோடு நம்மிடம் கொண்டுவருகிறார். 1 யோவான் 3:24-இல் இது உறுதிப்படுத்தப்படுகிறது: “அவர் நமக்கு அருளின ஆவியினாலே அவர் நம்மில் தங்கியிருக்கிறாரென்று அறிகிறோம்.”

யோவான் 14:15-17-ல் உள்ள முதல் பரிசுத்த ஆவி வாக்குத்தத்தத்தில், ஆவியானவரைப் பற்றி சொல்லப்படுவது, ஆண்டவர் இயேசுவைப் பற்றி சொல்லப்படுவதின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆவியானவர் இயேசு போதித்தது போலப் போதிக்கிறார இயேசு சாட்சி பகர்ந்தது போலச் சாட்சி பகர்கிறார இயேசு வழிகாட்டியது போல வழிகாட்டுகிறார். அவர் வெறும் எதிரொலி அல்ல, திருச்சபையில் கிறிஸ்துவின் உயிரான குரல்.

### 3. திரித்துவத்தில் பரிசுத்த ஆவியானவர்

சாரதர்மத்தில் சமம், நபரில் வேறுபட்டவர்

ஆரம்பகால திருச்சபை இறையியல் எப்போதும் வலியுறுத்தியது என்னவெனில், திரித்துவத்தின் மூன்று நபர்களும் ஒரே தெய்வீக சாரதர்மம் (ousia) உடையவர்கள ஆயினும் தனித்தனி நபர்களாக (hypostases) வேறுபட்டவர்கள். பிதா, குமாரன் அல்ல் குமாரன், ஆவியானவர் அல்ல் ஆவியானவர், பிதா அல்ல. ஆனால் கர்த்தர் ஒருவரே - மூன்று தெய்வங்கள் அல்ல. இந்த ஐக்கியம் என்னவெனில்: ஆவியானவர் இருக்கும் இடத்தில், பிதாவும் குமாரனும் இருக்கிறார்கள். ஆவியானவர் செயல்படும்போது, தனியாக அல்ல - முழு திரித்துவத்தின் முழு சக்தியோடு செயல்படுகிறார். ஆவியானவரை புறக்கணிப்பது திரித்துவம் முழுவதையும் புறக்கணிப்பதாகும்.

### "இரட்டுவம்" (Binity) என்னும் ஆபத்தான கோட்பாடு

Bishop Amos Akunda (2019) ஒரு எச்சரிக்கையை முன்வைக்கிறார்: பரிசுத்த ஆவியானவரை "சக்தி" அல்லது "வல்லமை" மட்டுமாகக் கருதும்போது, திருச்சபை அறியாமலேயே "இரட்டுவம்" என்னும் வேதவிரோதக் கோட்பாட்டிற்குள் நுழைகிறது. "அது" (it) என்னும் சொல்லை ஆவியானவருக்குப் பயன்படுத்துவது இதன் ஒரு அறிகுறி.

கான்ஸ்தாந்திநோபிள் சங்கம் (கி.பி. 381) பரிசுத்த ஆவியானவரின் முழு தெய்வீகத்தையும் முழு ஆள்நிலையையும் (Personhood) உறுதிப்படுத்தியது. அவர் பிதாவோடும் குமாரனோடும் சேர்ந்து வணங்கப்படுகிறார், மகிமைப்படுத்தப்படுகிறார். அவர் அவர்களின் பொருள் அல்ல் அவர்களோடு சம அந்தஸ்தில் இருக்கும் திரித்துவ நபர்.

### 4. திருச்சபையில் பரிசுத்த ஆவியானவரின் பணி

பெந்தகோஸ்தே நாளில் அவரது வருகை

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் ஐம்பதாம் நாள், பெந்தகோஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானவர் திருச்சபையிற் தம் அதிகாரப்பூர்வ வருகையை மேற்கொண்டார். சீஷர்கள் பயத்தோடும் குழப்பத்தோடும் மேல் அறையில் ஒன்றுகூடியிருந்தனர். திடீரென வல்லமையான காற்றோசையுடன், அக்கினி நாவுகளை ஒத்தவை அவர்கள் அனைவரிலும் தங்கின் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, வேற்றுப் பாஷைகளில் பேசத்தொடங்கினர் (அப்போஸ்தலர் 2:1-4). பயம் துணிச்சலாக மாறியது திருச்சபை பிறந்தது.

இது புதிதாக வந்த ஆவி அல்ல. கர்த்தரின் ஆவியானவர் (ருவாக்) படைப்பின் ஆரம்பம் முதல் (ஆதியாகமம் 1:2), தீர்க்கதரிசிகளின் வாயிலாக (ஏசாயா 6:1-10 அப்போஸ்தலர் 28:25), தலைவர்களை திறன்படுத்தும் (1 சாமுவேல் 16:13) முறைகளில் செயல்பட்டு வந்திருந்தார். ஆனால் பெந்தகோஸ்தே நாளில் புதிதொரு நிகழ்வு ஆரம்பமானது: ஆவியானவர் விசுவாசிகளின் சமுதாயத்தில் நிரந்தரமாக வாசம் செய்யத்தொடங்கினார் (யோவான் 14:16-17).

## ஆவியானவர் நமக்காக செய்வது என்ன?

பரிசுத்த ஆவியானவரின் பணி பன்முகமானது. அவர் ஒரே நேரத்தில் போதகர், தேற்றுபவர், சாட்சி, வழிகாட்டி, ஜீவன் அருள்பவர். ஆண்டவர் வாக்களித்தார்: "அவர் சகலத்தையும் உங்களுக்குப் போதிப்பார், நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 14:26). அவர் உலகை பாவத்திற்காகவும் நீதிக்காகவும் நியாயத்தீர்ப்புக்காகவும் கண்டிக்கிறார் (யோவான் 16:8-11) சகல சத்தியத்திலும் வழிநடத்துகிறார் (யோவான் 16:13).

ஆவியானவர் தத்தெடுப்பின் ஆவியும் ஆவார். பவுல் எழுதுகிறார்: "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியோடுகூடச் சாட்சிகொடுக்கிறார்" (ரோமர் 8:16). ஆவியானவர் மூலமாக நாம் "அப்பா, பிதாவே" என்று கர்த்தரை அழைக்கிறோம் - திரித்துவத்தின் குடும்ப வாழ்வில் நாம் இணைக்கப்படுகிறோம். "ஆவியின் கனியோ: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நன்மை, விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலாத்தியர் 5:22-23).

## திருச்சபையில் ஆவியின் வரங்களும் கனியும்

ஆவியின் வரங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையை கட்டுகின்றன (1 கொரிந்தியர் 12). ஆவியின் கனி விசுவாசியை உள்ளிலிருந்து மாற்றுகிறது. இவை இரண்டும் ஒரே தெய்வீக நபரின் செயல்பாடு - அவர் தனக்கு மகிமை தேடுவதற்காக அல்ல, பிதாவை குமாரன் மூலமாக திருச்சபை வாழ்வில் மகிமைப்படுத்துவதற்காக.

## ஆவியானவரும் தெஓஸிஸ் (Theosis) - தெய்வீக வளர்ச்சியும்

கிழக்கத்திய இறையியலில் ஒரு மாண்புமிக்க கோட்பாடு: தெஓஸிஸ் - விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவர் மூலமாக கர்த்தரின் சாயலில் மேன்மேலும் வளர்ந்துச்செல்லும் மாற்று நிகழ்வு. இது கர்த்தரோடு சமமாகுவது என்பதல்ல (அது தெய்வீக சாரதர்மத்திற்கே சொந்தம்) மாறாக, அருளால் பரிசுத்தம் அடைந்து, புதுப்பிக்கப்பட்டு, தெய்வீக குணங்களில் வளர்வது. சரோவின் புனித ஸெராபிம் சொன்னது: "கிறிஸ்தவ வாழ்வின் மையக் குறிக்கோள், கர்த்தரின் ஆவியை அடைவதே."

Nyssa-வின் கிரகோரி போதிக்கிறார்: இந்த மாற்றம் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே சாத்தியம். ஸ்நானத்தில் கிடைக்கும் ஆவியின் அபிஷேகம் (chrisma) விசுவாசிகளை "கிறிஸ்துக்கள்" ஆக்குகிறது - கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்ட பிள்ளைகளாக (1 யோவான் 2:20, 27). இது கர்வமல்ல் இது அருளின் மாபெரும் வரம்.

## 5. பரிசுத்த ஆவியானவரும் வேதாகமமும்

### பழைய ஏற்பாட்டில் அவரது குரல்

பரிசுத்த ஆவியானவரின் பணி பெந்தகோஸ்தேயில் ஆரம்பிக்கவில்லை. அவர் நித்தியர் - வரலாற்றுக்கும் காலத்திற்கும் அப்பாற்பட்டவர். பழைய ஏற்பாட்டில், அவர் கர்த்தரின் ஆவியாக (ருவாக் எலோஹிம்) படைப்பில் செயல்பட்டார் (ஆதியாகமம் 1:2) தீர்க்கதரிசிகளை வழிநடத்தினார் (ஏசாயா 6:1-10) எசேக்கியேல் 37:14). தலைவர்களை திடப்படுத்தினார் (1 சாமுவேல் 16:13). பவுல் வெளிப்படையாக சாட்சி கொடுக்கிறார்: "நம்முடைய பிதாக்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் ஏசாயா தீர்க்கதரிசியின் வாயிலாகச் சொன்னது நன்றாயிருக்கிறது" (அப்போஸ்தலர் 28:25).

### வேதாகமத்தை வெளிச்சமாக்குவதில் அவரது பாத்திரம்

ஆவியானவர் வேதாகமத்தின் ஊற்றுவாய் மட்டுமல்ல் அதன் வெளிச்சமுமாவார். "ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்கிறார்" (1 கொரிந்தியர் 2:10). அவர் நம்மை வேதாகமத்திற்கு மாறான தனிப்பட்ட வெளிப்பாட்டிற்கு வழிகாட்டுவதில்லை மாறாக, கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தை ஆழமாக்கி, நம் இதயங்களில் உயிரோடு ஆக்குகிறார். யோவான் எழுதுகிறார்: "அவராலே அபிஷேகம் பெற்றீர்கள்... அந்த அபிஷேகம் எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிக்கிறது" (1 யோவான் 2:27).

## 6. ஆவியில் நடத்தல் - சபையினருக்கான அழைப்பு

பரிசுத்த ஆவியானவரை இறையியல் ரீதியில் புரிந்துகொள்வது வெறும் கல்விப் பயிற்சியல்ல. இது ஒரு வாழ்க்கை முறைக்கான அழைப்பு. பவுல் கட்டளையிடுகிறார்: "ஆவிக்கேற்றபடி நடவுங்கள்" (கலாத்தியர் 5:25). ஆவிக்கு ஏற்றபடி நடத்தல் என்பது அவரது வழிகாட்டுதலுக்கு கூர்மையாக செவிகொடுப்பது, அவரது உணர்த்துதல்களுக்கு இணங்குவது, அவரது தேற்றுதலை ஏற்பது என்பதாகும். ஆவியானவரை துக்கப்படுத்தாமலும் (எபேசியர் 4:30), அவரது அக்கினியை அணைத்துவிடாமலும் (1 தெசலோனிக்கேயர் 5:19) வாழுமாறு அழைக்கப்படுகிறோம்.

சபையே பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் (1 கொரிந்தியர் 3:16). நாம் ஆராதனைக்கும் ஜெபத்திற்கும் அப்பம் பிட்டலுக்கும் ஒன்றுகூடும்போது, ஆவியானவர் இருக்கிறார் - தெளிவற்ற ஒரு சூழலாக அல்ல, ஆனால் போதிக்கும், சாட்சி சொல்லும், பரிந்துபேசும், பரிசுத்தப்படுத்தும் ஒரு ஆள்நிலை நபராக. அப்போஸ்தலர் 2:42-47 நமக்கு நினைவூட்டுவது: ஆரம்பகால திருச்சபை அப்போஸ்தலர் போதனைக்கும், கூட்டத்திற்கும், அப்பம் பிட்டலுக்கும், ஜெபத்திற்கும் தங்களை ஒப்புக்கொடுத்தனர் - ஆவியானவர் இந்த ஒவ்வொரு செயலிலும் வல்லமையாக இயங்கினார்.

ஆவியானவர் நம்முடைய தனிப்பட்ட ஆறுதலுக்காக மட்டும் அருளப்படவில்லை. அவர் நம்மை ஊழியத்திற்கு சித்தப்படுத்துகிறார். நற்செய்தி பறைசாற்றவும், ஏழைகளுக்கு சேவை செய்யவும், உடைந்த இதயங்களைக் குணப்படுத்தவும், உண்மையை உலகிற்குப் பேசவும் நம்மை வல்லமைப்படுத்துகிறார். உலகம் ஆவியானவரை “பார்க்கவும் இல்லை, அறியவும் இல்லை” (யோவான் 14:17). ஆவியானவரின் கனியால் நிரப்பப்பட்ட, அவரது வரங்களால் வல்லமைப் பெற்ற நம்முடைய வாழ்வின் மூலம் அவரை உலகிற்குக் காட்சிப்படுத்துவது நம்முடைய அழைப்பு.

### 7. மூன்றாம் நபரை புறக்கணிக்காதிருங்கள்

பரிசுத்த ஆவியானவர் தெளிவற்ற மர்மம் அல்ல, விளங்காத சக்தி அல்ல, தெய்வீகத்தின் குறைந்த அந்தஸ்து நபர் அல்ல. அவர் கர்த்தர் - சம்பூரண ஆள்நிலை, சம்பூரண தெய்வீகம், பிதாவோடும் குமாரனோடும் சம மேன்மை கொண்டவர், சம நித்தியர். அவர் நம்மிடையே கிறிஸ்துவின் பிரதிநிதி, திருச்சபைக்கு ஜீவன் அருள்பவர், சத்திய போதகர், துன்பத்தில் தேற்றுபவர், ஒவ்வொரு உண்மையான பரிசுத்தத்திற்கும் ஊழியத்திற்கும் பின்னுள்ள வல்லமை.

அவரை புறக்கணிப்பது நம்முடைய இறையியலை வறியதாக்கும நம்முடைய கிறிஸ்தவ வாழ்வை முடமாக்கும். அவரது நபரை தவறாக விவரிப்பது - அவரை ஒரு சக்தியாகக் குறைத்தாலும் சரி, பிதாவையும் குமாரனையும் விட தனியே அவரை மிகைப்படுத்தினாலும் சரி - வேதவிரோதமே. ஆரோக்கியமான பாதை திரித்துவப் பாதை: ஒரு கர்த்தரை மூன்று நபர்களில் வழிபடுவது, பிதாவின் அன்பை ஏற்பது, குமாரனின் மீட்பில் வாழ்வது, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு நடத்தப்படுவது.

திருச்சபையாகிய நாம், பரிசுத்த ஆவியானவருக்கு நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு பரிமாணத்திலும் இடம் கொடுப்போம் - ஆராதனையில், போதனையில், ஒரு மனது கொண்ட முடிவெடுப்பில், உறவுகளில், சாட்சிப் பணியில். ஏனெனில் ஆவியானவர் மூலமாகவே நாம் கர்த்தரின் ஜீவனை பெறுகிறோம். கிறிஸ்துவின் சாயலுக்கு மாற்றப்படுகிறோம். உலகில் கர்த்தரின் ஜனமாக நம்முடைய அழைப்பை நிறைவேற்றுகிறோம்.

### வசனம்

“நீங்கள் என்னில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அவர் உங்களுக்கு வேறொரு தேற்றரவாளனை அனுப்புவார் அவர் என்றென்றைக்கும் உங்களுடனே இருப்பார்.” யோவான் 14:15-16.

கிறிஸ்துவின் சேவையில்
அருட்திரு. ராஜ் குமார் ஜான் வெஸ்லி
ஆயர், தமிழ் திருச்சபை, ஃபுஜைரா

## வேதத்தில் பெண்கள்-17

## பெண்களும் நம்பிக்கையின் இறையியலும்

வேதாகமம் என்பது வெறும் ராஜாக்கள், தீர்க்கதரிசிகள், யுத்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் பதிவு மட்டுமல்ல. அது உலகம் புறக்கணித்த குரல்களின் கருவூலமும் ஆகும் - சாத்தியமற்ற காலங்களில் தெய்வீக நம்பிக்கையின் சுடரை ஏந்திய பெண்கள் அவர்கள். அவர்களின் கதைகள் மேடையின் மையத்தில் எழுதப்படவில்லை. பல கதைகள் மிக "முக்கியமான" விவரிப்புகளின் விளிம்புகளில் அடிக்குறிப்புகளாகவே இருந்தன. இருப்பினும், நாம் கூர்ந்து கவனிக்கும்போது, ஞாயிறு பிரசங்கங்களில் அரிதாகவே நினைவுகூரப்படும் பெண்களின் மூலமாக தேவன் தனது மிக முக்கியமான மீட்பின் கிரியைகளைச் செய்துள்ளார் என்பதை நாம் கண்டுகொள்கிறோம்.

### பழைய ஏற்பாட்டில் நம்பிக்கையின் பெண்கள்

### 1. ஆகார் - ஒதுக்கப்பட்டோரைக் காணும் தேவன் (ஆதியாகமம் 16:1-13, 21:8-21)

முழு வேதாகம விவரிப்பிலும் ஆகார் மிகவும் துயரமான மற்றும் புறக்கணிக்கப்பட்ட பெண்களில் ஒருவராவார். அவள் எகிப்திய அடிமைப் பெண் - எபிரெயப் பெண்ணோ, உடன்படிக்கையின் உறுப்பினரோ, சலுகை பெற்ற பெண்ணோ அல்ல. ஆபிரகாம் மற்றும் சாராய்க்குப் பகரத் தாயாக (surrogate mother) அவளை மாற்றிய ஏற்பாட்டில் அவளுக்கு எந்தக் குரலும் இருக்கவில்லை. அவள் கர்ப்பந்தரித்தபோது, பதற்றம் வெடித்தது, அவள் வனாந்தரத்திற்குத் துரத்தப்பட்டாள் - இரண்டு முறை. முதல் முறை, கர்ப்பிணியாகவும் தனியாகவும இரண்டாம் முறை, தன் மகன் இஸ்மவேலுடன் வெளியேற்றப்பட்டு, தண்ணீர் தீரும் வரை வனாந்தரத்தில் அலைந்து திரிந்தாள். தன் பிள்ளை இறப்பதைத் பார்க்க முடியாமல், அவனைக் ஒரு புதரின் கீழ் கிடத்திவிட்டு, தூரமாய் உட்கார்ந்து அழுதாள்.

"அப்பொழுது அவள்: என்னைக் காண்கிறவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னுடனே பேசின கர்த்தருக்குப் பிரதியட்சமாய் இருக்கிற தேவன் என்று பேரிட்டாள்." - ஆதியாகமம் 16:13.

### ஆகாரிடம் வெளிப்பட்ட நம்பிக்கையின் இறையியல்:

வனாந்தரத்தில், கர்த்தருடைய தூதன் ஆபிரகாமுக்கோ, சாராளுக்கோ அல்ல, ஆகாருக்கே தரிசனமானார். தேவன் அவளது பெயரைச் சொல்லி அழைத்தார். அவளுடைய துன்பத்தைக் கண்டார் (ஆதியாகமம் 16:11). அவளது மகனைக் குறித்து வாக்குத்தத்தங்களை அளித்தார் (ஆதியாகமம் 17:20 21:13). பழைய ஏற்பாட்டின் மிக ஆச்சரியமான தருணங்களில் ஒன்றாக, ஒரு வேற்றுநாட்டு அடிமைப் பெண் வேதாகமத்தில் தேவனுக்கு ஒரு புதிய நாமகரணத்தைச் சூட்டிய முதல் நபரானாள்: "எல் ரோயி" (El Roi) - "என்னைக் காண்கிற தேவன்" (ஆதியாகமம் 16:13).

நம்பிக்கையின் இறையியல் என்பது ஆறுதலின் இறையியல் அல்ல. அது வனாந்தரத்திற்குள் நுழையும் தேவனைப் பற்றிய இறையியல் ஆகும். ஆகாரின் நம்பிக்கை சார்ந்தது அல்ல - மனித கணக்கீட்டின்படி அவள் இன்னும் அடிமையாகவே இருந்தாள், அதிகாரமற்றவளாகவும், உடன்படிக்கைச் சமூகத்திற்கு வெளியேயும் இருந்தாள். ஆனால் அவள் தன்னைக் காண்கிறவரைக் கண்டாள். அந்தத் தரிசனம் அவளது விரக்தியை விடாமுயற்சியாக மாற்றியது. பவுல் அப்போஸ்தலன் பின்னர் கலாத்தியர் 4:21-31 இல் ஆகாரின் கதையை இறையியல் ரீதியாகக் குறிப்பிட்டு, உடன்படிக்கை சார்ந்த விவாதத்தில் அவளுக்கு நிரந்தர இடத்தை அளித்தார்.

### ஆகாரும் கர்த்தருடைய தூதனும்:

ஆகாருக்கு "கர்த்தருடைய தூதன்" காட்சியளித்தது (ஆதியாகமம் 16:7-13) கிறிஸ்து அவதாரத்திற்கு முந்தைய தேவகுமாரனின் வெளிப்பாடு (Christophany) என்று பல உரையாளர்கள் புரிந்து கொள்கிறார்கள். இத்தகைய நீண்ட உரையாடலை முதன்முதலில் அனுபவித்தவர் ஒரு வேற்றுநாட்டு அடிமைப் பெண் என்பது இறையியல் ரீதியாக மிகவும் ஆழமானது: தேவனுடைய கிருபை இனம், அந்தஸ்து மற்றும் சலுகை போன்ற அனைத்து மனித எல்லைகளையும் தகர்க்கிறது.

## 2. யெப்தாவின் குமாரத்தி - மௌன பலி (நியாயாதிபதிகள் 11:29-40)

அவளுக்குப் பெயர் இல்லை. வேதாகமம் முழுவதும் அவள் "யெப்தாவின் குமாரத்தி" என்று மட்டுமே அழைக்கப்படுகிறாள். அவளது தந்தை, ஒரு பராக்கிரமசாலியான நியாயாதிபதி, யுத்தத்திற்குச் செல்வதற்கு முன் தேவனுக்கு ஒரு அவசரமான பொருத்தனை செய்தார்: தான் சமாதானத்தோடே திரும்பி வரும்போது, தன் வீட்டு வாசற்படியிலிருந்து தனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்குரியதாகும். தம்பூருடனும் நாட்டியத்துடனும் அவரை எதிர்கொண்டு வரவேற்க ஓடிவந்தது அவருடைய ஒரே மகள்தான். யெப்தா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு துக்கப்பட்டார். அவளோ - வியக்கத்தக்க அமைதியோடு - தன் கன்னித்தன்மையைக் குறித்து மலைகளில் தன் தோழிகளோடு இரண்டு மாதங்கள் துக்கங்கொண்டாட மட்டுமே அனுமதி கேட்டாள். பின்னர் அவள் திரும்பி வந்தாள். யெப்தா தான் செய்த பொருத்தனையின்படியே அவளுக்குச் செய்தார்.

"இரண்டு மாத முடிந்தபின்பு, அவள் தன் தகப்பனிடத்துக்குத் திரும்பிவந்தாள் அவன் தான் செய்த பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான அவள் புருஷனை அறியாதிருந்தாள். இதினாலே இஸ்ரவேலின் குமாரத்திகள் வருஷந்தோறும் கீலேயாத்தியனாகிய யெப்தாவின் குமாரத்தியைக் குறித்து வருஷத்தில் நாலு நாள் புலம்புகிற வழக்கம் இஸ்ரவேலில் உண்டாயிற்று." - நியாயாதிபதிகள் 11:39-40

### அவளது மௌனத்தில் நம்பிக்கையின் இறையியல்

அவளது கதை வெறும் அநீதியை சகித்துக்கொண்ட கதை அல்ல - அது அநீதிக்கு மேலாக உயர்ந்தெழுந்த கதை. அவள் தன் தந்தையின் பொருத்தனைக்கு எதிராகக் கொதிக்கவில்லை. அவள் ஓடிப் போகவில்லை.

மரணத்தின் முன்னிலையிலும் அவள் கண்ணியத்தைத் தேர்ந்தெடுத்தாள். இஸ்ரவேலின் பெண்கள் அவளை நினைவுகூர்ந்தார்கள் - மௌனமாக அல்ல, புலம்பல் மற்றும் பாடல்களோடு (நியாயாதிபதிகள் 11:40). ஒவ்வொரு வருடமும் நான்கு நாட்கள், இஸ்ரவேலின் குமாரத்திகள் அவளது பெயரை நினைவுகூர்ந்தார்கள் - வேதாகம உரை அவளது பெயரை ஒருபோதும் நமக்குச் சொல்லவில்லை என்றாலும். இந்தப் பெயரற்ற குமாரத்தி கிறிஸ்துவின் நிழலாகத் திகழ்கிறாள். தனிமனித உயிர்வாழ்வை விட மேலான ஒன்றிற்குத் கீழ்ப்படிவதன் மூலம், பயத்தினாலல்லாமல், விருப்பத்தோடு தியாக மரணத்திற்குள் செல்லும் ஒருவரை அவள் பிரதிபலிக்கிறாள். அவளது நம்பிக்கை அவளது சூழ்நிலையிலிருந்து மீட்பு பெறுவதில் அல்ல, மாறாக தேவனுடைய மக்களின் அழியாத நினைவில் இருந்தது. அவள் நினைவுகூரப்படுகிறாள் என்பதே அந்த நம்பிக்கை. அவள் மறக்கப்படவில்லை.

### நம்பிக்கை என்பது ஏற்றுக்கொள்ளுதலாக மாறும்

யெப்தாவின் குமாரத்தி நமது நுகர்வோர் சார்ந்த நம்பிக்கையின் இறையியலுக்குச் சவால் விடுகிறாள் - நம்பிக்கை என்பது எப்போதும் மீட்பு அல்லது சூழ்நிலை தலைகீழாக மாறுவது மட்டுமே என்ற எண்ணத்திற்கு அவள் சவால் விடுகிறாள். வேதாகம நம்பிக்கை (எபிரெயம்: תִּקְוָה, tiqvah - "எதிர்பார்ப்பின் கயிறு" என்பது வெறும் நேர்மறை எண்ணம் அல்ல. ஒருவருடைய வாழ்க்கை விசுவாசத்தோடு அர்ப்பணிக்கப்படும்போது, அது நித்திய தேவனுடைய கரங்களில் சேருகிறது என்ற நிச்சயம். சில நம்பிக்கைகள் இந்த வாழ்க்கையில் அல்ல, மாறாக நினைவுகளில், வரவிருக்கும் வாழ்வில் மற்றும் நம்மைத் தாண்டி வாழும் சாட்சியங்களில் நிறைவேறுகின்றன என்பதை அவள் நமக்குக் கற்பிக்கிறாள்.

## 3. சூனேமிய ஸ்திரீ - தளராத நம்பிக்கை (2 இராஜாக்கள் 4:8-37, 8:1-6)

அவள் வெறும் ஒரு "கனம் பொருந்திய ஸ்திரீ" (2 இராஜாக்கள் 4:8) என்று விவரிக்கப்படுகிறாள் - செல்வந்தர், உபசரிப்பு குணம் கொண்டவர் மற்றும் பகுத்தறிவு உள்ளவர். எலிசா தீர்க்கதரிசி சூனேம் வழியாகக் கடந்து போகும்போதெல்லாம் தங்குவதற்காக அவள் தன் வீட்டின் மேல் ஒரு அறையைக் கட்டினாள். எலிசா அவளது அன்பிற்குப் பிரதிபலன் செய்ய விரும்பியபோது, அவள் எதையும் கேட்கவில்லை. ஆனால் எலிசாவின் ஊழியக்காரன் கேயாசி அவளுக்குப் பிள்ளை இல்லை என்பதையும், அவளுடைய புருஷன் முதிர்வயதானவன் என்பதையும் கவனித்தான். எலிசா அவளுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார் - அவள் கர்ப்பந்தரித்தாள். அந்தப் பிள்ளை வளர்ந்து, ஒரு நாள் வயலுக்குச் சென்று, தன் தந்தையிடம் தலைவலி என்று சொல்லி, பின்னர் தன் தாயின் மடியில் மடிந்துபோனான்.

"அப்பொழுது அவள்: நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரனைக் கேட்டேனா? எனக்கு அபாண்டம் சொல்லவேண்டாம் என்று நான் சொல்லவில்லையா என்றாள். ... அவள் மலையிலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்தில் வந்து, அவனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டாள கேயாசி அவளை விலக்கச் சமீபமாய் வந்தபோது, தேவனுடைய மனுஷன்: அவளை விலக்காதே, அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்தார் என்றான்." - 2 இராஜாக்கள் 4:28, 27

### அவளது உறுதியில் நம்பிக்கையின் இறையியல்

தன் மகனின் மரணத்திற்குச் சூனேமிய ஸ்திரீயின் எதிர்வினை எபிரெய வேதாகமத்தின் மிகவும் வியக்கத்தக்க இறையியல் தருணங்களில் ஒன்றாகும். அவளுடைய புருஷன் அவள் ஏன் தீர்க்கதரிசியிடம் போகிறாள் என்று கேட்டபோது, அவள் சுருக்கமாக: "சுகமாய் இருக்கிறது" (2 இராஜாக்கள் 4:23) என்றாள். பிள்ளை இறந்துவிட்டதை அவள் யாருக்கும் சொல்லவில்லை. அவள் எலிசாவிடம் அவசரமாகக் குதிரை ஏறிச் சென்று, அவனுடைய கால்களில் விழுந்து, அவன் வரும்வரை அவளை விட்டுப் போக மறுத்தாள். எலிசா வந்தார். ஜெபித்தார். பிள்ளை உயிர்த்தெழுப்பப்பட்டான் - இது உயிர்த்தெழுதலின் நிழலாட்டமாகும்.

இந்த ஸ்திரீயின் நம்பிக்கையின் இறையியல் இன்கார்னேஷனல் (மாம்சமான வடிவம்) ஆகும் - மரணம் அதை மறுத்தபோதும், தன் வாழ்க்கையின் மேல் உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தை இன்னும் நிலைத்திருக்கிறது என்று அவள் நம்பினாள். மரணம் இறுதி வார்த்தையாக இருக்க அவள் அனுமதிக்கவில்லை. அவள் தீர்க்கதரிசியை நோக்கி, முன்பு ஜீவனைக் கொடுத்த வார்த்தையின் ஊற்றை நோக்கி ஓடினாள். அவளது விசுவாசம் கடவுளை பற்றிக்கொள்ளும் விசுவாசம்.

பல வருடங்களுக்குப் பிறகு (2 இராஜாக்கள் 8:1-6), அவள் பஞ்சத்தின் காரணமாகப் பரதேசம் போய்விட்டுத் திரும்பி வந்தபோது, ராஜா எலிசாவின் அற்புதங்களைப் பற்றிக் கேட்டுக்கொண்டிருந்தார் - சரியாக அந்த நேரத்தில், கேயாசி இந்த ஸ்திரீயின் மகன் உயிர்பெற்ற கதையை ராஜாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தான். அவளுடைய நிலமும் சொத்தும் அவளுக்குத் திரும்பக் கிடைத்தன. தேவன் அவளை இரண்டு முறை நினைவுகூர்ந்தார். தங்கள் வாழ்வின் மேல் உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையை, சூழ்நிலைகள் அலறினாலும், பற்றிக்கொள்ள வேண்டியவர்கள் இவளைப் போன்ற நம்பிக்கையின் இறையியலைக் கொண்டிருக்க வேண்டும்.

### புதிய ஏற்பாட்டில் நம்பிக்கையின் பெண்கள்

#### 4. கூனியான ஸ்திரீ - 18 ஆண்டுகள் ஆனாலும் இன்னும் சமூகமளிப்பவள் (லூக்கா 13:10-17)

லூக்கா சுவிசேஷத்தில் அவளுக்குப் பெயர் இல்லை. பதினெட்டு வருஷமாய் ஒரு பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்டு - குனிந்து, நிமிரக்கூடாதவளாய் இருந்தாள் என்று மட்டுமே நாம் அறிகிறோம் (லூக்கா 13:11). ஓய்வுநாளில் அவள் ஜெப ஆலயத்தில் இருந்தாள். அவள் இயேசுவை நோக்கி முண்டி அடித்துக் கொண்டு வரவில்லை. அவள் சத்தமிடவில்லை. குணமடைய வேண்டும் என்று அவள் கோரவில்லை. அவள் சும்மா - அங்கே இருந்தாள்.

"இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள்மேல் தமது கைகளை வைத்தார் உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்."
- லூக்கா 13:12-13

**அவளது விசுவாசத்தின் உண்மைத்துவத்தில் நம்பிக்கையின் இறையியல்**

பதினெட்டு ஆண்டுகள். அது ஒரு சிறிய சோதனை அல்ல. அது கிட்டத்தட்ட இரண்டு தசாப்த கால உடல் ரீதியான துன்பம், உடல் நலக்குறைவு என்பது தெய்வீகத் தண்டனை என்று கருதப்பட்ட ஒரு கலாச்சாரத்தில் சமூக ரீதியான புறக்கணிப்பு (யோவான் 9:2 ஐ ஒப்பிடுக). குனிந்தபடி, யாருடைய கண்ணையும் நேராகப் பார்க்க முடியாமல் ஜெப ஆலயத்திற்கு வருவது. ஆனாலும் அவள் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தாள். வாரம் வாரம், அவளது உடைந்த உடலை தேவனுடைய ஆலயத்திற்கு இழுத்துக்கொண்டு வந்தாள். அவள் பரிசுத்தரின் சமூகத்திற்குள் தன் உடைந்த உடலைக் கொண்டுவந்தாள்.

இயேசு அவள் கேட்பதற்காகக் காத்திருக்கவில்லை. அவர் அவளை அறையின் மறுபுறத்திலிருந்து கண்டு, முன்னோக்கி அழைத்தார். அவளை "ஆபிரகாமின் குமாரத்தி" (லூக்கா 13:16) என்று அழைக்கிறார் - இது மத ஸ்தாபனங்கள் அவளுக்கு ஒருபோதும் வழங்காத உடன்படிக்கையின் உரிமைப் பெயராகும். இயேசுவின் இறையியலில், பதினெட்டு ஆண்டுகால துன்பம் ஒரு பெண்ணை உடன்படிக்கையின் அடையாளத்திலிருந்து தகுதியற்றவளாக்காது. ஜெப ஆலயத் தலைவனின் எதிர்ப்பு நம்பிக்கையின் மத அரசியலை வெளிப்படுத்துகிறது: அவர்கள் குணம் பெறுவது ஒழுங்காக, அட்டவணைப்படி, நிறுவன ரீதியாக நடக்க வேண்டும் என்று விரும்பினர். ஆனால் இந்த ஸ்திரீயின் விடுதலை அவர்களின் விதிகளை விட அவசரமானது என்று இயேசு பிரகடனம் செய்தார். அவளது நம்பிக்கை அன்றைய மத அதிகாரிகளுக்கு முன்பாக நிலைநாட்டப்பட்டது.

**"ஆபிரகாமின் குமாரத்தி" :** இயேசு இந்த ஸ்திரீயை "ஆபிரகாமின் குமாரத்தி" என்று குறிப்பிட்டது சுவிசேஷங்களின் மிக தீவிரமான சமூக-இறையியல் கூற்றுகளில் ஒன்றாகும். "ஆபிரகாமின் குமாரன்" என்பது பொதுவான ஒரு கௌரவப் பெயராக இருந்தபோதிலும் (லூக்கா 19:9 இல் சகேயுவைக் காண்க), "ஆபிரகாமின் குமாரத்தி" என்பது அந்த காலத்து யூத இலக்கியங்களில் முற்றிலும் முன்னோடி இல்லாத ஒன்றாகும். இயேசு அவளை விலக்கி வைத்த தலைவர்களுக்கு முன்னிலையிலேயே அவளுக்கு முழு உடன்படிக்கையின் கண்ணியத்தையும் பகிரங்கமாக மீட்டுக் கொடுத்தார்.

## 5. சீரோபெனிக்கியா தேசத்து ஸ்திரீ - மௌனத்திலிருந்து நம்பிக்கையை மற்போர் செய்து பெறுதல் (மத்தேயு 15:21-28, மாற்கு 7:24-30)

அவள் புறஜாதிப் பெண் - தீரு சீதோன் பகுதிகளைச் சேர்ந்த சீரோபெனிக்கியா தேசத்தவள். அவளுடைய குமாரத்தி அசுத்த ஆவியினால் கடுமையாக வேதனைப்பட்டாள். இயேசு அந்தப் பகுதியில் இருப்பதை அறிந்து அவரிடம் வந்து இரக்கத்திற்காகக் கெஞ்சினாள். சீஷர்கள் அவளை அனுப்பிவிடும்படி இயேசுவிடம் வேண்டினர். இயேசுவோ அவளை நிராகரிப்பது போலத் தோன்றினார்: "இஸ்ரவேல் வம்சத்தாராகிய காணாமல்போன ஆடுகளினிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல" என்றார் (மத்தேயு 15:24). அவளோ அவரிடம் வந்து பணிந்து கொண்டாள். அவர் வார்த்தைகளில் கடுமையானதாகத் தோன்றும் ஒன்றைச் சொன்னார்: "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நன்றல்ல" (மத்தேயு 15:26).

"அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். அப்பொழுது இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரியது. நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலேயே அவள் குமாரத்தி ஆரோக்கியமானாள்." - மத்தேயு 15:27-28

### அவளது விடாமுயற்சியில் நம்பிக்கையின் இறையியல்:

இயேசுவுக்கு அவள் அளித்த பதில் புதிய ஏற்பாட்டின் மிகவும் ஆச்சரியமான இறையியல் வாதங்களில் ஒன்றாகும். அவள் அந்த வெளிப்படையான அவமதிப்பிலிருந்து பின்வாங்கவில்லை. காயம்பட்ட கண்ணியத்துடன் விலகவில்லை. அவள் தன்னை விலக்கிய அதே உருவகத்தை எடுத்து, அதை உள்ளடக்கத்தின் (inclusion) இறையியலாக மாற்றினாள்: நாய்க்குட்டிகளும் கிருபையின் துணிக்கைகளைப் பெறுகின்றன. அவள் அந்த உருவகத்திற்குள்ளேயே வாதிட்டு வென்றாள்.

இயேசுவின் ஆச்சரியம் - "ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரியது!" என்பது புதிய ஏற்பாட்டில் ரோமானிய நூற்றுக்கு அதிபதியிடம் கூறப்பட்ட கூற்றுடன் மட்டுமே ஒப்பிடத்தக்கது (மத்தேயு 8:10). இரண்டு சந்தர்ப்பங்களிலும், இஸ்ரவேலரல்லாத ஒரு புறஜாதியினரே இயேசுவின் மிக உயர்ந்த விசுவாசப் பாராட்டப் பெறுகிறார்கள். அவளது நம்பிக்கை அவளது இனப் பின்னணியையோ மதத் தகுதியையோ அடிப்படையாகக் கொண்டது அல்ல. அது அவள் கூப்பிட்ட தேவனுடைய குணாதிசயத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது - மனித வகைகளால் தீர்க்க முடியாத அளவற்ற இரக்கம் கொண்ட தேவன் அவர்.

### விடாமுயற்சி கொண்ட நம்பிக்கையின் இலக்கணம்:

மத்தேயு 15:25 அவள் மீண்டும் மீண்டும், தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தாள். வசனம் 23 இல் சீஷர்களின் பதிலும், இயேசுவின் ஆரம்ப மௌனமும் விசுவாசத்தின் விடாமுயற்சியை உயர்த்திக் காட்டும் இலக்கிய உத்திகளாகும். ஜெபத்தில் வேதாகம நம்பிக்கை என்பது ஒருபோதும் ஒரு நொடி பரிவர்த்தனை அல்ல. அது பெரும்பாலும் நீடித்த, பாதிக்கப்படக்கூடிய மற்றும் விலையேறப்பெற்றது. தேவனுடைய மௌனம் என்பது தேவனுடைய அல்ல என்பதை அவள் நமக்குக் காட்டுகிறாள்.

## 6. காணாமல் போன காசைத் தேடிய ஸ்திரீ - பரலோகப் பொருளாதாரத்தின் காப்பாளர் (லூக்கா 15:8-10)

இயேசுவின் "காணாமல் போன" உவமைகளில், காணாமல் போன காசைத் தேடிய ஸ்திரீ பற்றிய உவமை மிகவும் முக்கியமானது. பத்து வெள்ளிக்காசுகளில் ஒன்றை இழந்த அவள், விளக்கை ஏற்றி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கும் வரை விடாமுயற்சியுடன் தேடுகிறாள். கண்டடைந்தபின், தன் நண்பர்களையும் அயலாரையும் அழைத்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறாள். இயேசு இதனை ஒரு பாவி மனந்திரும்பும்போது பரலோகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியுடன் ஒப்பிடுகிறார்.

"அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதர்களுக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." - லூக்கா 15:10.

### அவளது தேடுதலில் நம்பிக்கையின் இறையியல்

இந்த உவமை தேவனுடைய தேடும் கிருபையை வெளிப்படுத்துகிறது. நல்ல மேய்ப்பன், காணாமல் போன காசைத் தேடும் ஸ்திரீ, மற்றும் அன்பான தந்தை ஆகிய மூன்று உருவகங்களின் மூலம், இழந்தவர்களைத் தேடி மீட்கும் தேவனுடைய இதயத்தை இயேசு விளக்குகிறார். இழந்த காசு ஒரு பெண்ணின் தனிப்பட்ட மதிப்புமிக்க சொத்தாக இருந்திருக்கலாம எனவே அவளது தேடுதல் அவசரமானதும் முழுமையானதுமாக இருந்தது. அதுபோலவே, தேவன் ஒவ்வொரு ஆத்துமாவையும் மதிப்புமிக்கதாகக் கருதி தேடுகிறார்.

உவமை தேடுதலோடு முடிவடையவில்லை கொண்டாட்டத்தோடு முடிகிறது. நம்பிக்கை தனிப்பட்ட மகிழ்ச்சியாக இல்லாமல், சமூக மகிழ்ச்சியாக மாறுகிறது. இழந்தவர் மீட்கப்படும்போது பரலோகம் மகிழ்கிறது.

### வாழும் நம்பிக்கையின் இறையியல்

ஆகார், யெப்தாவின் குமாரத்தி, சூனேமிய ஸ்திரீ, கூனியான ஸ்திரீ, சீரோபெனிக்கியா தேசத்துத் தாய் மற்றும் காணாமல் போன காசைத் தேடிய ஸ்திரீ ஆகியோர் சமூக ரீதியாக வேறுபட்டவர்களாக இருந்தாலும், அனைவரும் நம்பிக்கையின் சாட்சிகளாக நிற்கிறார்கள். அவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருந்தபோதிலும், தேவன் அவர்களுடன் இருந்தார்.

நம்பிக்கையின் இறையியல் என்பது நிறைவேறாத தேவனுடைய வாக்குத்தத்தங்களை நோக்கி விசுவாசத்தோடு முன்னேறுவதாகும். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்ட இந்த நம்பிக்கை, இந்தப் பெண்களின் வாழ்வில் வெறும் கோட்பாடாக அல்ல, வாழ்ந்த யதார்த்தமாக வெளிப்பட்டது. அவர்கள் இன்றும் சபைக்கு, "தேவன் காண்கிறார், தேடுகிறார், நினைவுகூர்கிறார், மீட்டெடுக்கிறார ஆகையால் நம்பிக்கையை இழக்காதீர்கள்" என்று அறிவிக்கிறார்கள்.

கிறிஸ்துவின் சேவையில்
திருமதி பாலின் எமிமா
ஆயரம்மா, தமிழ் திருச்சபை, ஃபுஜைரா

## கரிசனையுள்ள தேவன்

என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. சங்கீதம் 66:20

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்புள்ள வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இராஸ் அல் கைமா திருச்சபையின் சார்பிலும் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். நாம் வாழும் ஐக்கிய அரபு தேசத்தில் வரும் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதம் கோடைகாலமாக உள்ளது. நம்மில் பலர் விடுமுறைக்காக தாயகம் செல்வதுண்டு. உங்கள் பிரயாணங்கள் பாதுகாப்பாயிருக்க ஜெபித்துக்கொள்கிறேன். மேலும் இந்த கோடை விடுமுறை காலத்தில் நமது பிள்ளைகள் வேத வசனங்களை கற்றுக்கொள்ள நமது திருச்சபையின் சார்பில் Memory Verse Contest ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் ஆண்டவருடைய வார்த்தைகளைப் படிப்பதற்கு அதிகமாக ஊக்கப்படுத்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அன்பானவர்களே! இவ்வருடத்தில் கடந்த ஆறு மாத காலங்கள் தேவனாகிய கர்த்தர் நம்மை பாதுகாத்ததை நினைவுகூறுவோம். நமக்கு அவர் செய்த நன்மைகளை நினைத்துப் பார்ப்போம். திருச்சபையின் ஊழியத்தில் அவர் நம்மை பயன்படுத்தியதை நினைத்துப் பார்ப்போம். இவை எல்லாவற்றிற்கும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இப்புதிய மாதத்திலும் அவர் நம்மேல் வைத்துள்ள கரிசனை எப்படிப்பட்டதென்று அறிந்து கர்த்தரை மகிமைப்படுத்துவோம்.

கரிசனை என்பது ஒருவர் மீதுள்ள தீவிரமான அக்கறையினால் அவர்களுடைய நலனில் காட்டும் ஈடுபாடாகும். தேவன் நம்மீது கரிசனையுள்ளவர் என்று கூறும்போது அதற்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு. சங்கீதம் 66: 13-20 வரையுள்ள பகுதியில் வாசிக்கும்பொழுது அதுவரை நாம் என்று பன்மையான (Plurel) வார்த்தைகளைப் பயன்படுத்திய சங்கீதக்காரர் இதற்குப் பிறகு நான் என்ற ஒருமையான (Singuler) வார்த்தைகளைப் பயன்படுத்தி தேவன் தனிப்பட்ட தன்னுடைய வாழ்வில் கரிசனையுள்ளவர் என்பதை அனுபவப் பாடலாகப் பாடினார். சங்கீதக்காரருடைய வாழ்வில் கீழ்க்கண்ட நிலையில் தேவனுடைய கரிசனை வெளிப்பட்டது.

### 1. தேவன் கவனித்துக் கேட்கிறார்:- சங்கீதம் 66:19

மெய்யாகவே தேவன் எனக்குச் செவி கொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தை கேட்கிறார். சங்கீதம் 66:19 இந்தப் பாடல் எழுதும்போது இதை எழுதிய சங்கீதக்காரர் நெருக்கடி, சோதிக்கப்படுதல், சிறைப்பட்டநிலை மற்றும் மரண பயத்தினால் நின்று கொண்டிருந்தவராய் இருந்திருக்கலாம் என வசனம் 10-12 மூலம் அறியமுடிகிறது. எனவே இப்படிப்பட்ட சூழலில் நின்றவர்களின் சத்தத்தைத் தேவன் கரிசனையோடு கேட்கிறவர் என்பதை வெளிப்படுத்துகிறார். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து எப்படி நம்முடைய வார்த்தைகளை கவனித்துக் கேட்கிறார், நம் மீது எப்படி கரிசனை உள்ளவர் என்பதற்கு பல சம்பவங்களைக் கூறலாம். மாற்கு 10: 48-49-ல் பர்திமேயு தனக்கு சுகம் வேண்டி கூட்டம் மிகுதியாயிருந்த வேளையிலும் தடைகள் ஏற்பட்டபொழுதும் அவன் சத்தமிட்டு கூப்பிட்டதை கவனித்து இயேசு கரிசனையோடு வந்து அவனை சுகப்படுத்தினார். நாமும் நமக்கு வரும் இக்கட்டில் தேவனை நோக்கிக் கூப்பிடுவோம்.

### 2. தேவன் பதில் கொடுக்கிறவர்:- சங்கீதம் 60: 20

என் ஜெபத்தைத் தள்ளாமலும்........இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. என் ஜெபத்தைத் தள்ளவில்லை என்று சங்கீதக்காரன் பாடும்போது தான் தகுதியற்றவனாக இருந்தாலும் தேவன் தன்னுடைய ஜெபத்தை நிராகரிக்காமல் தன்னுடைய கரிசனையை வெளிப்படுத்துவதைக் குறித்துப் பாடுகிறார். புதிய ஏற்பாட்டில் லூக்கா 18-ம் அதிகாரத்தில் சோர்ந்து போகாமல் ஜெபித்து தேவனிடத்திலிருந்து பதில் வாங்குவதற்கு விதவைத் தாயினுடைய உவமையையும், தாழ்மையாய் ஜெபிக்கும்போது கர்த்தர் பதில் தருகிறவர் என்பதற்கு ஆயக்காரனுடைய ஜெபத்தையும் இயேசு கிறிஸ்துவானவர் சுட்டிக்காட்டினார். எந்தச் சூழ்நிலையிலும் தேவனாகிய கர்த்தர் நமது வேண்டுதலுக்கு பதில் தந்து நம் மீது வைத்துள்ள கரிசனையை வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார்.

### 3. தேவன் நம்மை நேசிக்கிறவர்:- சங்கீதம் 66: 20

தமது கிருபையை என்னை விட்டு விலகாமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. தேவன் நம் மீது வைத்திருக்கிற அன்பையும், கரிசனையையும் நிலைவரமானது. மனிதனைப் போல மாறுகின்ற குணநலன்களை உடையது அல்ல. தமது கிருபையை என்னை விட்டு விலக்காமல் இருக்கிற என்ற வார்த்தையை கவனிக்கும் போது மனிதனுடைய தவறு வெளிப்படுத்துகிறது. குற்ற உணர்வு வெளிப்படுத்தப்படுகிறது. இதையெல்லாம் தாண்டி தேவன் நம்மை நேசிக்கிறார் தமது கரிசனையை நம் மீது வெளிப்படுத்துகிறவராயிருக்கிறார். இதை தேவன் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மில் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் (ரோமர் 5:8) என்பதின் மூலம் தமது ஒரேகுமாரனை தந்து நம்மில் தனது கரிசனையை வெளிப்படுத்துகிறார்.

அன்பானவர்களே! தேவன் நம்மைக் குறித்து கரிசனை உள்ளவராய் இருப்பதினால் அவர் எல்லாவிதத்திலும் நமக்கு செவி கொடுக்கிறவராய் இருக்கிறார். இது எப்படி சாத்தியமாகும், அவரை நோக்கிக் கூப்பிடவேண்டும். நம் இருதயத்தில் உள்ள அக்கிரம சிந்தனைகளைக் களையவேண்டும். அது மட்டுமல்ல, நம் தேவனுக்கு நம்முடைய நாவுகளால் வார்த்தைகளால் சொல்லிய பொருத்தனைகளை நிறைவேற்ற வேண்டும். கரிசனை அன்பு மிகுந்த ஆண்டவர் நம் அனைவரையும் இப்புதிய மாதத்தில் நிறைவாய் வழி நடத்தி ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. D.ஜோசப்
ஆயர், இராஸ் அல் கைமா.

## தமிழ் வேத வகுப்பு ஜூன் 2026 - சரியான பதில்களை எழுதியவர்கள்

1. Bernice Bila Paul
2. Evan
3. Ethan
4. Jessica Magdalene
5. Ashmi Shalom
6. Antrina Jessica
7. Jaden Rodney
8. Anto Jaiden
9. Godwin Darwin
10. Adam Ryan Abeth
11. Kelvin Jeffery
12. Trinita Joanna
13. Bertina Baburaj
14. Diwan Pohle
15. Sagredo Ebraham Nixon
16. Kevin Thomas
17. Rafael Vijay
18. Jervin Jeba Robert Jefferson
19. Jeslin Shifani
20. Mark Jayden
21. P. Rijo Jeyan
22. P. Lijo Sam
23. Jonath Stephen
24. Jerioth Stephen

## அப்போஸ்தலருடைய நடபடிகளில் பெண்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கிறிஸ்தவர்களின் வரலாற்று புத்தகமான அப்போஸ்தலருடைய நடபடிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களின் வாழ்வு முறைகளையும், இயேசு கிறிஸ்துவில் அப்போஸ்தலர்களுக்கு அவர்கள் எப்படி உதவிக்காரர்களாயிருந்தார்கள் என்பதையும், கிறிஸ்துவின் ஊழியத்தில் அவர்களின் பங்களிப்பை குறித்தும் அறிந்து வருகிறோம். அவ்வகையில் இம்மாதம் லீதியாள் (Lydia) என்ற பெண்ணின் வாழ்வை அறிந்து கிறிஸ்துவில் நாம் பலப்பட ஆண்டவர் உதவிசெய்வாராக.

### லீதியாள் (Lydia)

அப்பொழுது தீயத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரி கேட்டுக்கொண்டிருந்தாள். பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அப்போஸ்தலர் 16:14.

லீதியாள் வேதாகமத்தில் அப்போஸ்தலருடைய நடபடிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களில் மிகவும் முக்கியமான பெண்களில் ஒருவராவார். இவரைப் பற்றிய குறிப்புகள் அப்போஸ்தலர் 16:11-15 மற்றும் 16:40 ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

#### லீதியாளின் பின்னணி:-

பண்டைய கால ஆசியா மைனர் பகுதியும் தற்போதைய துருக்கி நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள தீயத்தீரா என்பது லீதியாளின் சொந்த ஊராகும். கிரேக்கப் பின்னணியம் கொண்ட லீதியாள் தன்னுடைய சொந்த ஊரான தீயத்தீராவிலிருந்து தன்னுடைய தொழில் காரணமாக பிலிப்பு பட்டணத்தில் குடும்பமாக வசித்து வந்தாள். அடிப்படையில் தீயத்தீரா வணிகத்திற்கு பெயர் பெற்ற இடமாக இருந்தது. மேலும் விலையுயர்ந்த இரத்தாம்பர துணிகளுக்கும் பெயர் பெற்ற இடமாகத் திகழ்ந்தது. பிலிப்பு பட்டணத்தில் குடியேறிய லீதியாள் பிலிப்பு பட்டணத்தில் தீயத்தீரா ஊரின் புகழ்பெற்ற இரத்தாம்பர துணிகளை விற்கும் வியாபாரியாகவும், சிறந்த விசுவாசியாகவும் வாழ்ந்தார். அப்போஸ்தலர்கள் காலத்து திருச்சபைக்கு இவரின் பங்களிப்புகள் கீழ்க்கண்டவாறு அமைந்து அது திருச்சபையின் வளர்ச்சிக்கு ஆசீர்வாதமாக இருந்தது.

### 1. ஐரோப்பாவின் முதல் கிறிஸ்தவ விசுவாசி

ஆசியாவின் பல பகுதிகளில் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி ஆண்டவருடைய ஊழியம் பவுலால் நிறைவேற்றப்பட்டது. பின்னர் தேவனால் தரிசனம் பெற்று ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிலுள்ள மாசிடோனியாவுக்குப் போக ஆயத்தப்பட்டார் (அப்போஸ்தலர் 16:10). போகும் வழியில் ரோமானிய நகரமான பிலிப்பு பட்டணத்தில் சில காலங்கள் தங்கியிருந்து ஊழியம் செய்தார். இங்கு இருந்த காலத்தில் பிலிப்பு நகர கோட்டைவாசலுக்கு வெளியே சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்த ஆற்றங்கரையில் கூடும் மக்களிடத்தில் உபதேசித்து இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை பவுல் செய்துகொண்டிருந்தார். பொதுவாக இவ்விடத்தை ஆண்டவரை தேடும் மக்கள் ஜெபிக்கப் பயன்படுத்தினார்கள். அங்கு வந்தவர்களில் லீதியாளும் ஒருவர். பவுலுடைய வார்த்தைகளைக் கவனிக்கும்படி தேவன் லீதியாளின் உள்ளத்தைத் திறந்தருளினார். பின்னர் லீதியாளின் குடும்பமும் இணைந்து ஞானஸ்நானம் பெற்று ஐரோப்பாவின் முதல் விசுவாசியாகவும், விசுவாசக் குடும்பமாகவும் உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் ஐரோப்பாவிலிருந்துதான் அதிகமான அருள்பணி இயக்கங்கள் (மிஷனரி ஸ்தாபனங்கள்) உருவாகி அநேக மிஷனரிகள் இந்திய தேசத்திற்கு அனுப்பப்பட்டு ஆண்டவரின் ஊழியத்தைச் செய்து நிறைவேற்றினார்கள்.

### 2. அக்கறையுள்ள விசுவாசி: (அப்போஸ்தலர் 16:15)

உபசரிக்கும் பண்பு பழைய ஏற்பாட்டின் காலந்தொட்டு யூதர்களின் வாழ்வியலாக இருந்து வந்தது. "தேவனை வணங்குகிறவளுமாகிய" என்ற வார்த்தையிலிருந்து லீதியாள் கிரேக்கப் பின்னணியிலிருந்து யூத மதத்திற்கு மாறியதை அறியமுடிகிறது. எனவே உபசரித்தல் மற்றும் ஊழியர்களின் மீது அக்கறையுள்ள விசுவாசியாக வாழ்வதைக் காணமுடிகிறது. யாருக்கும் பாரமாயிருக்க விரும்பாத பவுல் கிடைத்த இடத்தில் தங்கி கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். இங்கு வசனத்தில் லீதியாள் "வருந்திக் கேட்டுக்கொண்டாள்" என்ற வார்த்தையிலிருந்து லீதியாள் ஊழியக்காரர்களின் மீது அதிக அக்கறையுடையவள் என்பதும் அவர்களை உபசரிப்பதைத் தனக்கு ஆசீர்வாதமாகவும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குத் தங்குமிடத்தையும், உபசரிப்பையும் வெளிப்படுத்தினாள். இதன் மூலம் தடையில்லாமல் பிலிப்பு பட்டணத்தில் தேவனுடைய ஊழியம் பெருகித் திருச்சபை உருவாக்கப்பட்டது.

### 3. அடைக்கலம் கொடுத்த விசுவாசி: (அப்போஸ்தலர் 16:40)

பிலிப்பு பட்டணத்தில் லீதியாளின் வீட்டில் தங்கியிருந்து ஊழியஞ்செய்துவந்த பவுலைப் பட்டணத்திலுள்ள குறிசொல்லும் ஆவியுடைய பெண்ணின் எஜமானர்கள் அவளிடமிருந்து பவுல் அசுத்த ஆவியை துரத்தினபடியினால் பவுலை பிலிப்பு பட்டணத்து சிறையிலடைத்து வைத்துக் கொடுமை செய்தனர்.

பின்னர் கர்த்தரால் அற்புதமாக விடுதலை பண்ணப்பட்ட பின்பு பவுலுக்கும், சீலாவுக்கும் லீதியாளின் வீட்டில் அடைக்கலம் கொடுக்கப்பட்டது. இங்கு கவனிக்கவேண்டியது என்னவெனில் வேறு இடத்திலிருந்து பிழைப்புக்காகவும், தொழிலுக்காகவும் கடந்துவந்த லீதியாள் தன்னுடைய பிழைப்பையும், தொழிலையும் முக்கியத்துவப்படுத்தாமல் அவளுடைய வீட்டை உபத்திரவங்கள் மிகுந்த அக்காலத்தில் தேவனுடைய ஊழியர்களுக்கு அடைக்கலமாக ஏற்படுத்திக் கொடுத்து தேவஊழிய திட்டத்தில் தன்னையும் இணைத்துக்கொண்டு தேவனை மகிமைப்படுத்தினாள்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! லீதியாளைக் குறித்து வேதாகமத்தில் சில வசனங்களில் மட்டும்தான் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவளுடைய கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவுக்கும், அவருடைய ஊழியத்திற்கும் சாட்சியாக அமைந்தது. செல்வம் மிகுந்த வாழ்க்கை வாழ்ந்தாலும் கிறிஸ்துவின் அடியவர்களுக்கு அவள் செய்த உதவிகள் என்றும் மறக்கமுடியாது. அவளுடைய கிறிஸ்தவ வாழ்வு புதிய கண்டத்திற்கு (ஐரோப்பா) அடிப்படையாக அமைந்தது. நாமும் நம்முடைய வாழ்வைக் குறித்து கவலைப்படாமல் கிடைக்கின்ற தருணங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்தி கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்காகவும், சபையின் பக்தி விருத்திக்காகவும் நம்மை அர்ப்பணித்து செயல்படுவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

திருமதி. P. அன்பு வனிதா ஜோசப்
ஆயரம்மா - இராஸ் அல் கைமா.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜுலை 2026

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 05-07-2026 | பணியிடங்களில் இறைவனை கனப்படுத்துதல் | யாத்தி. 31:1-11 | கொலோ. 3:22-25 | லூக்கா 17:7-10 | 104:1-24 |
| 12-07-2026 | இறையியல் கல்வி: கற்றுக்கொள்ளும் திருச்சபையை உருவாக்குதல் | நெகேமியா 8:1-12 | 1கொரிந். 14:20-23 | மத்தேயு 13:16-23 | 1 |
| 19-07-2026 | அர்ப்பணிப்புள்ள ஆசாரியத்துவம்: சேவை செய்ய அழைப்பு | எரேமியா 1:4-10 | 1 பேதுரு 5:1-4 | மத்தேயு 20:20-28 | 132 |
| 26-07-2026 | ஏற்ற துணையாக வாழ்வதே திருமணம் | பிரசங்கி 4:9-12 | எபேசியர் 5:21-33 | மத்தேயு 19:4-6 | 128 |

# செயலர் மடல்

**“இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமானது!” சங்கீதம் 133:1**

கிறிஸ்துவில் அன்பிற்கினிய சபையாரே,

நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் எங்களது அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தருடைய அளவற்ற கிருபையினாலும், மாறாத அன்பினாலும், கடந்த மாதங்களில் நமது சபையில் நடைபெற்ற அனைத்து பரிசுத்த திருவிருந்து ஆராதனைகளும், ஜெபக் கூட்டங்களும், உபவாச ஜெபங்களும், சங்க ஐக்கியங்களும், ஞாயிறு பள்ளி, இளைஞர் மற்றும் சிறுவர் ஊழியங்களும், கேம்ப் ஊழியங்களும், பிரேயர்செல் ஊழியங்களும், ஆசீர்வாதமாகவும் ஆவிக்குரிய பலனுள்ளவையாகவும் நடைபெற்றன. இதற்காக எல்லா மகிமையும், துதியும், கனமும் நம்முடைய தேவனுக்கே செலுத்துகிறோம்.

மேலும், பர்துபாய் பிரேயர் செல் சார்பாக நான்காவது வார ஆராதனையில் சிறப்பு பாடல்கள் பாடி கர்த்தருடைய நாமம் மகிமைப்படுத்தப்பட்டது. நமது சபையின் வருடாந்திர தோத்திர பண்டிகை (Harvest Festival) நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இம்மாதம்முதல் அறுப்பின் பண்டிகை ஆயத்தப் பணிகளின் ஒரு பகுதியாக Weekly Food Sale ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவாரமும் food stall அமைக்க உதவிசெய்யும் அனைத்து Prayer Cell குடும்பங்களுக்கும் கர்த்தருடைய நாமத்தில் நன்றி செலுத்துகிறோம்.

அதேபோல், ஜபலாலி கிரைஸ்ட் சர்ச்சில் நடைபெற்று வரும் அனைத்து ஆராதனைகள் மற்றும் சிறப்பு பாடல் ஆராதனைகளுக்காகவும் கர்த்தருக்கு நன்றியும் ஸ்தோத்திரமும் செலுத்துகிறோம்.

புஜைரா சபை மற்றும் ராஸ் அல் கைமா சபையில் நடைபெற்று வரும் ஆராதனைகள் மற்றும் அனைத்து ஊழியங்களுக்காக கர்த்தருக்கு நன்றியும் ஸ்தோத்திரமும் செலுத்துகிறோம். இந்த சபைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்து வரும் போதகர்களின் சேவையையும் நன்றியுடன் பாராட்டுகிறோம்.

“தூதன்” புத்தகத்தின் மூலம் தேவனுடைய வார்த்தைகளையும், ஆவிக்குரிய சிந்தனைகளையும், Children's Corner, வேதாகம வினாடி-வினா (Quiz) மற்றும் பிற பதிவுகளில் பங்களிக்கும் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களுடைய அர்ப்பணிப்பையும் உழைப்பையும் கர்த்தர் நினைவுகூர்ந்து, அவர்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து பயன்படுத்துவாராக.

**"அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்"** **(கலாத்தியர் 5:13)**

ஜூன் 14, 2026 அன்று நடைபெற்ற 47வது ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் (AGM), தேவனுடைய கிருபையால் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன், புதிய நிர்வாகக் குழுவிற்கான தேர்தலும் நடைபெற்றது. இத்தேர்தலின் மூலம் துணைத் தலைவராக (Vice President) திரு டேவிட் ராஜன் அவர்களும், துபாய்க்கான இரண்டு வார்டன்கள், பத்து நிர்வாகக் குழு உறுப்பினர்கள், புஜைரா மற்றும் ராஸ் அல் கைமா பிரதிநிதிகள், ஆடிட்டர், தேர்ந்தெடுக்கப்பட்டனர். நேரக் குறைவின் காரணமாக கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு ஜூன் 21, 2026 அன்று மீண்டும் கூடி, அருட்பணி. சுதாகர் அவர்களின் ஜெபம் மற்றும் ஆசீர்வாதத்துடன் நிறைவடைந்தது. அதனைத் தொடர்ந்து அதே நாளில் காலை 11.30 மணிக்கு அருட்பணி. சுதாகர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில், திரு.பிரகாஷ் பி அவர்கள் செயலராக (Secretary), திரு.ஜான்சன் அவர்கள் பொருளராக (Treasurer) தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கர்த்தர் தமது சித்தத்தின்படி இந்த புதிய நிர்வாகக் குழுவை ஏற்படுத்தியதற்காக அவருக்கு நன்றியை செலுத்துகிறோம். புதிய நிர்வாகக் குழுவினருக்கு ஞானம், பெலன், தாழ்மை, ஒற்றுமை மற்றும் ஆவியின் வழிநடத்துதலை அருளி, சபையின் வளர்ச்சிக்கும் ஊழிய முன்னேற்றத்திற்கும் வல்லமையாக பயன்படுத்துவாராக என்று ஜெபிக்கிறோம்.

இத்தருணத்தில் கடந்த காலத்தில் சபையை அர்ப்பணிப்புடனும் பொறுப்புணர்வுடனும் வழிநடத்திய தலைவர், செயலர், பொருளர் மற்றும் அனைத்து நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் சபையின் சார்பாக எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தர் அவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் ஆசீர்வதித்து தொடர்ந்து தமது சேவையில் பயன்படுத்துவாராக.

**"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது"** **சங்கீதம் 138:8**

வரவிருக்கும் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் கோடை விடுமுறையை முன்னிட்டு, நமது சபையின் அனைத்து பிள்ளைகளுக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன், தேவனுடைய ஆசீர்வாதங்கள் உண்டாகும்படி ஜெபிக்கிறோம். இந்த விடுமுறை நாட்கள் சரீர ஓய்வு மட்டுமல்லாமல், தேவனோடு நெருக்கமான ஐக்கியத்தை வளர்த்துக்கொளவும், தனி ஜெபங்களை வலுப்படுத்தவும், ஆவிக்குரிய புத்துணர்ச்சியைப் பெற்றுக்கொளவும் ஒரு அருமையான வாய்ப்பாக அமையட்டும். தங்களது சொந்த நாடுகளுக்கும், பல்வேறு இடங்களுக்கும் பயணம் செய்யத் திட்டமிட்டுள்ள சபை உறுப்பினர்கள் அனைவரையும் கர்த்தருடைய கரங்களில் ஒப்படைக்கிறோம். கர்த்தர் அவர்களுடைய போக்கையும் வருகையையும் காத்து, எல்லா ஆபத்துகளிலிருந்தும் விடுவித்து, சந்தோஷமும், சமாதானமும், இனிய நினைவுகளையும் அருள்வாராக.

மேலும், நமது சிறுவர்களுக்காக "Shipwrecked" என்ற கருப்பொருளில் சம்மர் கேம்ப் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. மிஸ். பிபிஷா ஷேரன் பிரைட் அவர்கள் இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட்டு வழிநடத்த உள்ளார். பிள்ளைகள் அனைவரும் இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, தேவனுடைய அன்பையும் இரட்சிப்பின் மகத்துவத்தையும் அறிந்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம். இந்த நிகழ்வின் ஒவ்வொரு காரியங்களையும் தேவன் தாமே வழிநடத்தி, நமது பிள்ளைகளின் வாழ்வில் ஆசீர்வாதம் அருள்வாராக.

ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறவிருக்கும் அனைத்து ஆராதனைகள், ஊழியங்கள் மற்றும் நிகழ்வுகளுக்காக சபையார் அனைவரும் இடைவிடாது ஜெபத்தில் தாங்கிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நாம் செய்யும் எல்லாவற்றிலும் கர்த்தருடைய நாமமே உயர்த்தப்படவும், அவருடைய சித்தம் நிறைவேறவும் ஜெபிப்போமாக.

**“எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.”** பிலிப்பியர் 4:6 என்றபடி, போர் சூழ்நிலைகள் நீங்கி சமாதானம் நிலவவும், பொருளாதார சூழ்நிலைகள் சீரடையவும், நமது சபையின் வளர்ச்சிக்காகவும், CDA அனுமதி, சபை பதிவு மற்றும் சபைக்கான வங்கி கணக்கு திறப்பு போன்ற காரியங்கள் நிறைவேறவும், சபையையும் அதன் ஊழியங்களையும் தொடர்ந்து ஜெபத்தில் தாங்கி ஆதரிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

வருங்காலங்களிலும் நமது சபை தேவனுடைய சித்தத்தின்படி மென்மேலும் வளர்ந்து, அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் சாட்சியாகவும் விளங்க கர்த்தர் கிருபை செய்வாராக கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் தொடர்ந்து வழிநடத்தி, ஆரோக்கியம், சமாதானம், சந்தோஷம் மற்றும் ஆவிக்குரிய செழிப்பினால் நிரப்புவாராக. கர்த்தருடைய நாமம் மாத்திரம் மகிமைப்படுவதாக.

**“சமாதானத்தின் தேவன் உங்களோடே இருப்பாராக. ஆமென்.”** ரோமர் 15:33

கிறிஸ்துவின் பணியில்,
**பிரகாஷ் பி**
**செயலர்**

## Newly Elected Executive Committee for the term 2026-2028

| Office Bearers |
| --- |
| 1.Mr. David Rajan - Vice President |
| 2.Mr. P. Prakash - Secretary |
| 3.Mr. A. Johnson - Treasurer |
| |
| **Dubai Members** |
| 1.Mr. Andhria Lawrance |
| 2.Mr. C. Arun Raja |
| 3.Mr. David Tilak Wilson |
| 4.Mrs. Flower Grace |
| 5.Mr. R. Jefferson |
| 6.Mr. T. Jose Albin |
| 7.Mr. Peter Gnanasigamony |
| 8.Mr. Singh Ratnam |
| 9.Mr. Daniel Francis (Warden) |
| 10.Mr. B. Ebi John (Warden) |
| |
| **Fujairah Member** |
| 1.Mr. Solomon Prince |
| **Ras Al Khaimah Member** |
| 1.Mr. Ujin Raj Kanakaraj |
| **Internal Auditor** |
| 1.Mr. Jeyaseelan |

# நீங்கள் கிறிஸ்தவரா...

"தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி
என்கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்,
உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்." **சங்கீதம் 101:6**

உலகம்
உய்ய வந்தவரே!
தேவனின் -
மாமணியே!
உலகம் போற்றும்
இயேசு நாதரே!
வேதத்தின் நிறைவே!
அண்ட சராசரங்களின்
ஆண்டவரே!
படைப்பின்
பாத்திரரே!
உலகின்
உண்மையான
திரியேகரே!
என்றும் உமது
நாமமே!...
எங்கள் நாவிலே!
உலகில் முழுதும்
விடுவிக்கும்
உன்னதமானவரே!
உம்மிலே...
முகம்பதித்து
முழங்காலிட்டு
முற்றும் துறந்து
முழுஇருயத்தோடு
மனம் ஒன்றி
ஜெபிப்போமே!
இயேசு கிறிஸ்துவின்
பாதம் பணிந்தே...
நம்... பிறப்பின்
ஒரே லட்சியமான
நித்தியமான
பரம் சேருவோம்.

பிரியமானோரே!
நேசம், பாசம்
அன்பு, அறம்
மனித நேயம்
இப்படி...
பலதரப்பட்ட
மானிடம் வாழும்
தேசத்தில்
ஒருவரின்
உடலும்
உள்ளமும்
தூய்மையானால்
இறை இயேசு
எபிரெயர் 4:12ல்
இறைவார்த்தையது
உயிருள்ளதே!.
இதயத்தின் ஆழம் யது
செல்லுமதே!
இருபுறமும் கூர்மையது
பட்டையத்திலும்
கருக்கானதே!
மனதின் எண்ணமது
மறைந்திருந்தாலும்,
மாயைகள் எல்லாம்
மறைக்கப்பட்டாலும்,
தேவனின் வார்த்தை
ஆராய்ந்து பார்த்தே
தூயவழிதனிலே
நம்மை நடத்துமதே.
வீழ்ந்திடும் வேளையில்
தாங்கும் சக்தி,
விரக்தி நேரம்
மதில் தரும் நம்பிக்கை

வார்த்தையில் பதித்தே
வாழ்ந்திடுவோம்
வெற்றி பாதை அது
நடத்திடுமே!!!
தேவனுடைய
வார்த்தை உயிரும்
வல்லமையும்
உடையதுவே!!
தித்திக்கும் அருள்..
எத்திக்கும்
நிறைந்து காக்கும்.
அன்பானோரே
வீட்டின் எந்த
பாகமானாலும் சரி...
சிதறிவிழுந்த
விதை.. பல..
நாட்களுக்கு பின்
எதிர்பாரா விதமாக
முளைத்து எழுந்து
நிற்கும்... நாம்
காண்பது கண்கூடு.
அதே போன்று
இயேசுவின்.. நாமம்
உச்சரித்து
வருமோமானால்
அதன் பலன்
ஒருநாள்
வந்தே தீரும்
அத்தகு சக்தி...
கிறிஸ்து இயேசுவின்
நாமம்...
இயேசுவின்
நாமம். ஜெயமே!!!

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 05-07-2026, 02-08-2026 (முதல் ஞாயிறு)

"அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத்தேயு 18:19

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக துதிப்போம்.
- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலன், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- நம் பணிகள், தொழில்கள் மற்றும் பிரயாணங்களில் ஆண்டவர் அருளிய பாதுகாப்பிற்காக துதிப்போம்.
- ஜுன் மாதம் அனைத்து ஆராதனைகளும தடையில்லாமல் நடந்தமைக்காக
- கடந்த நாட்களில் யுத்த சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் ஆண்டவர் தந்த பாதுகாப்புக்காகவும், யுத்த நிறுத்தத்திற்காகவும் துதிப்போம்.
- சபையின் 47-வது AGM சிறப்பாக நடைபெற கர்த்தர் உதவியதற்காக ஜெபிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், மற்றும் அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்
- ஃபுஜைரா, இராஸ் அல் கைமா சபைகளின் ஊழியங்களுக்காக, சபை வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- புதிதாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ள திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,

- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனஙகளுக்காக,
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனையின் மருத்துவர்களுக்காக, அவர்கள் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
- July & August மாதங்களில் நடைபெறும் Summer Camp ஆசீர்வாதமாக நடைபெறவும், அநேக பிள்ளைகள் பங்குபெறவும் ஜெபிப்போம்.

## இந்திய நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் ஆட்சியாளர்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வேளாண்மை (விவசாயி) களுக்காக, அனைத்து சமயத்தாரும் ஒற்றுமையாக இருக்க, வறட்சி நீங்க, இயற்கை வளங்கள் பாதுகாப்புக்காக, மழைநீரை பாதுகாத்து பயன்படுத்த ஜெபிப்போம்.
- இந்திய அரசு பாரபட்சமில்லாமல், நடுநிலையோடு ஆட்சி செய்ய
- வேற்றுமைகள் ஒழிந்து சமத்துவம் வளர, மத தீவிரவாத அமைப்புகளின் மனமாற்றத்திற்காக
- தேசம் முழுவதும் எல்லை பாதுகாப்புக்காக, தீவிரவாதிகளின் அச்சுறுத்தலிலிருந்து விடுதலை பெற
- தேசத்தில் நடைபெறும் அனைத்து மிஷனெரி ஊழியங்களுக்காக
- கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் மாற ஜெபிப்போம்.
- தமிழகத்தில் அமைந்துள்ள புதிய அரசு சிறப்பாக செயல்பட ஜெபிப்போம்.

## ஐக்கிய அரபு நாடுகள் (UAE) தேசங்களுக்காக ஜெப வேண்டுதல்கள்

- அரசர் குடும்பங்களுக்காக, தேசத்தின் பாதுகாப்புக்காக, இராணுவத்தினருக்காக
- நல்ல வேலை வாய்ப்புக்காக, வேலை தேடி வருபவர்களுக்கு நல்ல வேலைகள் கிடைக்க, யுத்தத்தினால் வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் வேலை பெற்றிட, தொழில் வளர்ச்சி ஏற்பட ஜெபிப்போம்.
- UAE-ல் உள்ள CSI திருச்சபை ஊழியங்களுக்காக
- UAE-ல் நடைபெறும் அனைத்து திருச்சபைகள் ஊழியங்களுக்காக
- சாலை விபத்துக்கள் தவிர்க்கப்பட ஜெபிப்போம்
- அனைத்து சமயத்தாரும் சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ
- விடுமுறை காலங்களில் சொந்த ஊர்களுக்கு சென்று திரும்பும் குடும்பங்களின் பிரயாண பாதுகாப்புக்காக

## உலக நாடுகளுக்காக ஜெப வேண்டுதல்கள்

- ஈரான் - இஸ்ரவேல், அமெரிக்கா, லெபனோன் தேசங்களின் யுத்தம் முழுவதும் கைவிடப்பட, வளைகுடா நாடுகளின் மீதான தாக்குதல் தொடராதிருக்க
- உக்ரைன் - ரஷ்யா போர் சமாதானத்திற்காக, மத்திய பிராந்திய நாடுகளில் சமாதானத்திற்காக
- வளைகுடா நாடுகள் யுத்த பாதிப்புகளிலிருந்து மீண்டுவர, தொழில் வளர்ச்சி பெற
- பருவநிலை மாற்றத்திற்காக, மற்றும் இயற்கை பேரழிவுகளிலிருந்து பாதுகாக்கப்பட
- உலகம் முழுவதும் நடைபெறும் ஆண்டவரின் திருப்பணிக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக ஜெபிப்போம்.
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக ஜெபிப்போம்.
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக ஜெபிப்போம்.
- வியாதிகள் மற்றும் பலவீனங்களால் மருத்துவமனைகளிலும், தொடர் சிகிச்சையிலும் இருப்போரின் சரீர சுகத்திற்காக ஜெபிப்போம்.
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத்திற்காக மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக ஜெபிப்போம்.
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்.
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்
- வேலைகளை இழந்திருப்போர், ஊதியம் குறைக்கப்பட்டிருப்போர் மற்றும் நீண்ட நாள் விடுப்பில் அனுப்பப்பட்டிருப்போர் இழந்த நன்மைகளை மீண்டும் பெற ஜெபிப்போம்.
- கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும், உயர்கல்விக்காக தாயகம் மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- ஒவ்வொரு வாரமும் நடைபெறுகின்ற camp ஊழியங்களுக்காக
- CDA அங்கீகாரத்திற்காக, Dubai தேசத்தில் CSI Tamil Parish ஆலயம் எழுப்ப ஜெபிப்போம்.
- தொழில் மற்றும் வேலைவாய்ப்புக்காக பிற நாடுகளுக்கு பயணம் செய்யும் நமது திருச்சபை மக்களுக்காக ஜெபிப்போம்.
- புதிதாக திருமணமானவர்கள் மற்றும் கணவன் மனைவி சரியான புரிந்துகொள்ளுதலுக்காக, குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.
- சிகிச்சை பெற்று வரும் பிள்ளைகள் பிரைசன், தேவாநீஷ் மற்றும் Mr. செல்லப்பா ஆகியோரின் சுகத்திற்காக ஜெபிப்போம்.
- Mr.Rajesh & Mrs. Sheela அவர்களின் குடும்பம் சமாதானம் பெற ஜெபிப்போம்.

# வேதவினா போட்டி - ஜூலை & ஆகஸ்ட் 2026

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(ஆதியாகமம் 11-20)

கீழ்கண்ட வினாக்களுக்கு ஆதியாகமம் 11-20 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. தங்களுக்குப் பேர் உண்டாக ஜனங்கள் கட்டியது என்ன?
2. “உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்” - என்று தேவன் சொன்னது எந்த தேசத்தை?
3. ஆபிரகாம் எங்கு தன் முதலாவது பலிபீடத்தைக் கட்டினான்?
4. கர்த்தருடைய தோட்டம் போல் இருந்தது எது?
5. ஆபிரகாமை ஆசீர்வதித்த ராஜா யார்?
6. கர்த்தர் எதை ஆபிரகாமுக்கு நீதியாக எண்ணினார்?
7. ஆபிரகாம் இஸ்மவேலைப் பெற்றபோது ஆபிரகாமுக்கு வயது என்ன?
8. ஈசாக்கின் பெயர் முதலாவது எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?
9. பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனது யார்?
10. ஆபிரகாம் சாராளை “சகோதரி” என்று குறிப்பிட்டது எங்கெங்கு?

சரியான விடை அனுப்ப வேண்டிய முகவரி :

office@csitamilparishdubai.com

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Miss Yediyah Kelvin

D/o. Kelvin & Mrs. Greeni Kelvin

17-06-2026

## ஜூன் 2026 வேதவினா போட்டி விடைகள்

1. மனிதன் தனிமையாக இருப்பது. ஆதி. 2:18
2. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை. ஆதி. 2:17
3. காயீன். ஆதி. 4:1
4. 930 வருடங்கள். ஆதி. 5:5
5. மனிதனை உண்டாக்கினதற்காக. ஆதி. 6:6
6. 600 வயது. ஆதி 7:11
7. 150 நாட்கள். ஆதி 8:3
8. நோவா ஆதி 8:20
9. மேகத்தில் தோன்றும் வில். ஆதி 9:13
10. காமின் குமாரன். ஆதி. 10:6

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஆகஸ்ட் 2026

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-08-2026 | அருட்பணி: கருணையுடன் செயல்படுதல் | ஏசாயா 58:6-10 | 1 யோவான் 3:16-18 | மத்தேயு 9:35-38 | 82 |
| 09-08-2026 | ஞானஸ்நானம்: கிறிஸ்துவில் அடையாளப்படுத்துதல் | ஆதியா. 11: 7-24 | 1 பேதுரு 3:18-22 | யோவான் 3:1-8 | 32 |
| 16-08-2026 | ஒப்புரவாக்கும் திருவிருந்து | யாத்தி. 31:1-11 | 1கொரிந். 10:14-22 | மத்தேயு 5:23-26 | 85 |
| 23-08-2026 | ஒடுக்கப்பட்டவரோடு ஒன்றினையும் ஆண்டவர் | உபாகமம் 26:5-11 | பிலேமோன் 1:10-18 | யோவான் 4:5-14 | 146 |
| 30-08-2026 | புலம்பெயர்ந்தோரையும் அடைக்கலமற்றவரையும் ஏற்றுக்கொள்ளுதல் | லேவிய. 19:33-37 | எபேசியர் 2:11-22 | லூக்கா 10:25-37 | 46 |

# ஜுன் 2026 வேதவினா போட்டி பதில் எழுதியவர்கள்

1.திருமதி. ஐரிஸ் பொன்கிறிஸ்டோபர்
2.திருமதி. அனித்தா ஆல்வின்
3.திருமதி. சுஜி ஜாய்ஸ்
4.திருமதி. இனிதா ஜோனா
5.திருமதி. செல்லா ஆலன்
6.திருமதி. ஜெனிபா அருண்ராஜா
7.திருமதி. ஜெரி∴பா விவேக்
8.திருமதி. கிருபா ஜான்சன்
9.திருமதி. ஷெலினா அசோக்
10.திருமதி. விஜிதா ஷாஜின்
11.திருமதி. லதா ராஜன்
12.திருமதி. பெமி டார்வின்
13.திரு. பிரவீன் ராஜா
14.திருமதி. பனிமலர் விஜய்
15.திருமதி. நிர்மலா பேட்ரிக்
16.திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
17. செல்வி. ஜெய்சுதா ஜான்சன்
18.திருமதி. ஷீபா சிகாமணி
19.திருமதி. மெர்லின் விஜில்
20.திரு. V.மோகன்
21.திருமதி. ஹென்சி நிக்சன்
22.திருமதி. ஜுலி ஹரோல்ட்
23.திருமதி. ஜெனிபர் ஜாஸ்மின்
24.திருமதி. வாலண்டினா செல்லப்பா
25.திருமதி. சிருஷ்டி ராணி
26.திருமதி. சாந்தி ஸ்டார்
27.திருமதி. செல்வரதி ஆபிரகாம்
28.திருமதி. ஜெயகிருபா சாலொமோன்
29.திருமதி. ஷிபு அர்ஜுனன்
30.திருமதி. பிரியா ஜீவகுமார்
31.திருமதி. ரூபி ஞான காந்தி
32.திருமதி. ஷீபா ஞான வின்ஷா ஸ்பர்ஜன்
33.திருமதி. ஹெப்ஸி ஆண்டனி ஆனந்த்
34.திருமதி. ஜரின் ஷிஜி
35.திருமதி. ஜோசபின் கே நிக்சன்
36.திருமதி. ஜெரின் ஜெ∴ப்ரி
37.திருமதி. ஷாமினா பென்னி
38.திருமதி. ஷீஜா ஜெயசிங்
39.திருமதி. ரோஸ்லின் இம்மானுவேல்
40.திருமதி. அகஸ்டா ஜேம்ஸ்
41.திருமதி. பிரியா சாம்
42.திரு.ஆண்டனி ஆனந்த்
43.திருமதி. ரோஸ்லின் ஜெயகுமார்
44.திருமதி. சில்வியா டேவிட்
45.திருமதி. ஹேமா ஜெயன்
46.திருமதி. பெனிலின் ஜெபின்
47.செல்வி. ஸ்வீன் வீவா நிக்சன்

# தெரிந்து கொள்வோம்

## பாடல் பிறந்த வரலாறு
## திருமதி. ∴பிரான்சஸ் ரிட்லி ஹேவர்கல்



திருமதி. ∴பிரான்சஸ் ரிட்லி ஹேவர்கல் அவர்கள் 1836-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் நாள் இங்கிலாந்து நாட்டில் உள்ள வொர்செஸ்டர்ஷையரில் ஆஸ்ட்லியில் என்னும் இடத்தில் பிறந்தார். இவரது தந்தை Rev. வில்லியம் ஹென்றி ஹேவர்கல் மிகச் சிறந்த போதகர் மற்றும் இசையமைப்பாளர். 1837-ம் ஆண்டு ஆஸ்ட்லி தேவாலயத்தில் ஞானஸ்நானம் பெற்றார்.

1850-ம் ஆண்டு ∴பிரான்சஸ் திருமதி டீடின் பள்ளியில் கல்வி கற்றார். பின்னர் ஜெர்மனியில் 1852-ம் ஆண்டு டுசெல்டார்∴பில் உள்ள லூயிசென்ஷீல் மற்றும் ஓபர்காசெல்லில் படித்தார். அவர் கிரேக்கம் மற்றும் ஹீப்ரு மொழிகளை கற்றறிந்தார்.

1873-ம் ஆண்டு திரு. J.D. ரென்∴போர்டின் அவர்கள் எழுதிய All for Jesus என்ற சிறு புத்தகத்தை படித்தார். அதன்பிறகு அவருடைய முழு வாழ்க்கையும் மாற்றியது. தன்னை முற்றிலும் கிறிஸ்துவுக்காக ஒப்புக்கொடுத்தார். எளிமையாகவும் இனிமையாகவும் அவர் கடவுளின் அன்பையும், அவருடைய இரட்சிப்பின் வழியையும் குறித்து பாடினார்.

∴பிரான்சஸ் அவர்களின் ஊழிய பாதையில் அவருடைய இறையியல் சார்புகளும் மனக்கண்ணோட்டங்களும், கவிதைகளும் இறை அன்பை வெளிப்படுத்தின. கிறிஸ்துவின் அன்பு எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும், எல்லாரும் இரட்சிப்பு அடையவேண்டும் என்று எண்ணினார். பாடல்கள், கவிதைகள், பக்தி நூல்கள் எழுதுவதையே அவர் தன் வாழ்நாள் பணியாக கண்டார். ஒவ்வொரு நாளுக்கும் ஒரு தியானத்தையோ அல்லது கவிதையையோ நூலாக வெளியிட்டார். அது பலருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது.

∴பிரான்சஸ் எழுதிய 6 புத்தகங்கள் மிகவும் சிறந்தது. அவர் எழுதிய பாமாலைகள் Hymns Ancient and Modern, Hymns and Sacred Lyrics, Church Hymns, The Hymn companion என்பவைகள் மிகச் சிறந்த படைப்புகள்.




ஃபிரான்சஸ் அவர்கள் எழுதிய பாடல்கள்

- பொன்னகர் இன்பத்தைப் பெற்றிடுவோம்
- தெய்வா சமாதான இன்ப நதியே
- கிறிஸ்தேசுவே நீர் எனக்காய்
- பயப்படாதே மாந்தரே கர்த்தர் பார்த்துக் கொள்வார்
- அருள்நாதா நம்பி வந்தேன்
- Awake O Israel put off thy slumber
- I gave up life for thee
- Another year is dawning

கிறிஸ்துவின் அன்பை பாடல்கள், கவிதைகள், சிறு கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தின திருமதி. ஃபிரான்சிஸ் ரிட்லி ஹேவர்கல் 1879-ம் ஆண்டு ஜூன் 3-ம் நாள் தனது 42-ம் வயதில் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார். அவர் மறைந்தாலும் இன்றும் அவர் எழுதிய பாடல்கள் நமது திருச்சபைகளில் பாடப்பட்டு வருகிறது.

R. ஜெபர்சன்

## நித்தியத்தில் நுழைந்தவர்கள்...

**“கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்”**
நமது சபை அங்கத்தினர்
Mrs. Synthiya Enoc அவர்களின் தகப்பனார்
Mr. Winston Henry அவர்கள் 04-06-2026 அன்று
கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

# HEALTH TIPS

## BEAT THE HEAT

This month let's learn how to beat the summer heat!




Choosing the best foods to eat in summer not only keeps us cool but also helps prevent common issues like heat strokes, digestion problems, and fatigue. Focus on foods with high water content, natural electrolytes, and cooling compounds. About 20% of your daily hydration naturally comes from what you eat, so snacking on fresh products will keep your body temperature regulated and prevent fatigue.

Load up on Watermelon and Cucumbers, which consist of over ≈ 92-95% water, it flushes toxins and hydrates the body. Zucchini is up to 95% water and is packed with Vitamin A and magnesium to improve immune health and cool you down.

### Natural Hydration & Electrolytes:

- Sip on tender coconut water or Buttermilk to replace lost minerals and soothe your stomach.
- Add fresh mint to cold water, the menthol in mint naturally interacts with cold-sensitive receptors in your body.
- Oranges, grapefruits, and lemons contain antioxidants that reduce internal heat and boost digestion.
- Yoghurt (Curd): A delicious probiotic that is much easier on the digestive system than heavy, fried foods.

### What to Avoid:

- Limit your intake of Spicy foods, heavy fried foods, which can irritate the stomach and raise body temperature.
- Heavy gravies and red meats: These slow digestion and cause your body to produce excess metabolic heat.
- Caffeine & Alcohol: Both act as diuretics and accelerate dehydration.
- Lighter meals are much easier to digest and prevent your body temperature from spiking.

## சமாதானம்

1. சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்று கூறியவர் யார்? யோவான் 14:27
2. யார் பாக்கியவான்கள்? - மத்தேயு 5:9
3. அவர்கள் யார் என்று அழைக்கப்படுவார்கள்? - மத்தேயு 5:9
4. கர்த்தர் தமது ஜனத்திற்குச் எதை அருளி செய்வார் ? சங்கீதம் 29:11
5. தேவசமாதானம் எவைகளை கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்? - பிலிப்பியர் 4:7
6 சமாதானப்பிரபு என்று யாரை அழைக்கிறோம்? ஏசாயா 9:6
7. நீதியின் கிரியை, பலன் என்ன?" ஏசாயா 32:17
8. தேவதூதர்கள் இயேசுவின் பிறப்பின்போது பூமியில் எதை அறிவித்தார்கள்? - லூக்கா 2:14
9. சமாதானக்கட்டினால் எதை காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். என்று கூறப்பட்டுள்ளது? - எபேசியர் 4:3
10. கர்த்தர் ஆசாரியர்களுக்குக் கற்றுக்கொடுத்த ஆசீர்வாதத்தின் இறுதி வார்த்தை என்ன? எண்ணாகமம் 6:26

### பதில் குறிப்பு:

- பூமியிலே சமாதானமும்,
- மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி,
- தேவனைத் துதித்தார்கள்,
- சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.
- உனக்குச் சமாதானம் அருள்வாராக.
- இயேசு கிறிஸ்து,
- உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும்,
- இயேசு கிறிஸ்து, நீதியின் கிரியை சமாதானமும்,
- நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்.,
- உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்,
- சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்
- அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.
- கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.

# CHILDREN'S CORNER

